விலை ரூபா: 8.00
*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி
*Valampurii*

பக்கங்கள்:- பதினான்கு
சங்கு 06 | வள்ளுவர் ஆண்டு 2036 | தை 16 | சனிக்கிழமை (29.01.2005) | தொலைபேசி 2223378, 2227644 | ஒலி 41

புதுப் பொலிவுடன் திருநெல்வேலியில்
WESTERN UNION பணப் பரிமாற்றம்
* விரைவானது * பாதுகாப்பானது * நம்பகமானது
இப்பொழுது உலகின் எப்பாகத்திலிருந்தும் மிக துரிதமாக பணத்தினை பெற்றுக்கொள்வதற்கு
♦பணம் பெறுவதற்கு வங்கிக்குப் போகத் தேவையில்லை
♦வங்கிக் கணக்கு அவசியமில்லை
♦நீடிக்கப்பட்ட சேவை நேரம்
♦365 நாள் சேவை
♦10 (MTCN) இலக்கங்களைப் பெற்றவுடன் எம்மை நாடவும்
THIRUMURUGAN COM NET
T.P. 021 2227310
021 2227555
021 2227560
FAX 021 2227310
E-mail: thirumurugan@eudoramail.com
46, ஆடியபாதம் வீதி, (ப.நோ.கூ.ச. முன்பாக) திருநெல்வேலி யாழ்ப்பாணம்

## வடக்கு - கிழக்கு நிவாரணத்திற்கு 403 மில். ரூபா அரசு வழங்கியது

### தேசிய நடவடிக்கை நிலையம் அறிவிப்பு

(கொழும்பு)

சுனாமிப் பேரலைத் தாக்கத்தினால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு மக்களின் நிவாரண நடவடிக்கைகளுக்காக இதுவரை 403 மில்லியன் ரூபா அரசாங்கத்தினால் வழங்கப்பட்டுள்ளதாக தேசிய நடவடிக்கை நிலையம் அறிவித்துள்ளது.

இதில் அம்பாறை மாவட்டத்திற்கு 110 மில்லியன் ரூபாவும் யாழ். மாவட்டத்திற்கு 42 மில்லியன் ரூபாவும், கிளிநொச்சி மாவட்டத்திற்கு 46 மில்லியன் ரூபாவும், முல்லைத்தீவு மாவட்டத்திற்கு 45 மில்லியன் ரூபாவும், மட்டக்களப்பு மாவட்டத்திற்கு 95 மில்லியன் ரூபாவும், திருகோணமலை மாவட்டத்திற்கு 65 மில்லியன் ரூபாவும் வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிதியிலிருந்து உலர் உணவுப் பொருட்கள் இடம்பெயர்ந்தோர் தங்குவதற்கான கூடாரங்

(14 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள்-அரச- பிரதிநிதிகள் நேற்று கொழும்பில் சந்திப்பு!

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் சமாதான செயலகப் பிரதிநிதிகளுக்கும் அரசாங்க சமாதான செயலகப் பிரதிநிதிகளுக்குமிடையே நேற்றுக் கொழும்பில் சந்திப்பொன்று இடம்பெற்றது.

இச் சந்திப்பில் சுனாமி அனர்த்த நிவாரணம் மற்றும் மீள்கட்டுமானம், புனரமைப்பு நடவடிக்கைகள் குறித்தும், இது தொடர்பான பொதுக் கட்டமைப்பை உருவாக்கும் விடயம் குறித்தும் ஆராயப்பட்டதாக தெரியவருகிறது.

இதேவேளை சுனாமி நிவாரணப் பணிகளை முன்னெடுப்பது தொடர்பில் அரசிற்கும் புலிகளுக்கும் இடையே பொது இணக்கப்பாட்டு கட்டமைப்பை உருவாக்குவது சம்பந்தமாக சாதகமான நிலைமை ஏற்பட்டுள்ளதாக தெரியவருகிறது. (இ)

# வடமராட்சியில் சுனாமி வதந்தி

# மக்கள் அல்லோலகல்லோலம்!

(யாழ்ப்பாணம்)

**சுனாமி ஆழிப்பேரலை மீண்டும் ஏற்பட்டு கடல் அலைகள் குடிமனைகளை நோக்கிச் சீறிப் பாய்வதாக பரப்பப்பட்ட வதந்தியால், நேற்று வடமராட்சி கரையோரப் பகுதி மக்கள் பெரும் களேபரமடைந்து அல்லோலகல்லோலப்பட்டனர்.**

**இதனால் பீதியடைந்த மக்கள் கையில் அகப்பட்டதை எடுத்துக் கொண்டு உயிரைப் பிடிக்க நகரின் மையப் பகுதிகளுக்கு இடம் பெயர்ந்து சென்றனர்.**

சுனாமி அனர்த்தம் ஏற்பட்டு ஒரு மாதம் கடந்த நிலையில் நேற்று மீண்டும் கடற் கொந்தளிப்புடன் ஆழிப்பேரலைகள் குடிமனைக்குள் சீறிப் பாய்வதாக பரவிய வதந்தியால், வடமராட்சி கரையோரப் பகுதியை சேர்ந்த மக்கள் பெரும் களேபரம் அடைந்து அல்லோலகல்லோலப்பட்டுக் கொண்டு உயிரைக் காப்பாற்ற ஓட்டம் பிடித்தனர். கையில் அகப்பட்டதை எடுத்துக்கொண்டு மக்கள் நகரின் மையப் பகுதிகளை நோக்கி இடம்பெயர்ந்தனர்.

முற்பகல் 10 மணியளவில் காட்டுத் தீ போல கிசு கிசு என பரவிய வதந்தியால் கரையோரப் பகுதி எங்கும் பெரும் பரபரப்பும் அச்சமும் ஏற்பட்டது.

### கரையோரப் பகுதி எங்கும் நேற்று பெரும் பரபரப்பு: மக்கள் இடம்பெயர்வு

பேரலை (14 ஆம் பக்கம் பார்க்க)



சுனாமியால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு பகுதிக்கு நேற்று முன்தினம் சென்ற அன்ரன் பாலசிங்கம் தம்பதியினர் அழிவுகளை அவதானிப்பதை படத்தில் காணலாம்.

## புலிகளின் கிழக்கு தளபதிகள் நேற்று வன்னி வந்தனர்

(கிளிநொச்சி)

தமிழீழ விடுதலைப் புலிகளின் கிழக்குப் பிராந்தியத் தளபதிகள் நேற்று வன்னி வந்தடைந்தனர்.

மட்டு - அம்பாறை மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் பானு, திருகோணமலை மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் சொர்ணம், ஆகியோரே நேற்று வன்னி வந்தடைந்தனர்.

நேற்றுக் காலை 9.15 மணியளவில் (14 ஆம் பக்கம் பார்க்க)

## மன்னாரில் நேற்று கண்டனப் பேரணி

(மன்னார்)

இராணுவமும் பொலிசாரும அண்மைக்காலமாக மேற்கொண்டுவரும் அராஜகங்களைக் கண்டித்தும், சுனாமி நிதியை அரசு ஆயுதக் கொள்வனவுக்கு பயன்படுத்துதல், தமிழர் பிரதேசம் திட்டமிட்டு புறக்கணிக்கப்படுதல் என்பனவற்றை கண்டித்தும் நேற்று மன்னாரில் கண்டனப்பேரணி நடத்தப்பட்டது.

வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் ஏற்பாடு செய்திருந்த இக்கண்டனப் பேரணியில் பல்லாயிரக்கணக்கான மக்கள் எழுச்சியுடன் கலந்துகொண்டனர்.

மக்கள் தமிழீழ தேசியக் கொடியையும், புலிச்சின்னங்களையும், பதாதைகளையும் தாங்கிய வண்ணம் அரசுக்கெதிராகவும் இராணுவத்திற்கெதிராகவும் கோஷங்களை எழுப்பினர் காலை 11 மணியளவில மன்னார் வைத்தியசாலை சந்தியில் ஆரம்பமான பேரணி பிரதான வீதி வழியே நகர்ந்து கச்சேரியை சென்றடைந்தது.

அங்கு தமிழ் மாணவ ஒன்றியத் தலைவரினால் மகஜர் வாசிக்கப்பட்டு மக்கள் சார்பாக இரத்தக் கையொப்பமிடப்பட்டு மன்னார் அரச அதிபர் வே. விஸ்வலிங்கத்திடம் வெகுஜன அமைப்பு ஒன்றிய பிரதிநிதிகளால் கையளிக்கப்பட்டன.

பேரணியில் வன்னி பாராளுமன்ற உறுப்பினர்கள் அடைக்கலநாதன், சிவசக்தி, ஆனந்தன், விநோதராதலிங்கம், ஆயரின் பிரதிநிதி அருட்பணி விக்டர் சோசை ஏனைய மதத் தலைவர்கள் உட்பட பெருந்திரளானோர் கலந்துகொண்டனர்.

இதேவேளை கண்டனப் பேரணிக்கு அடம்பன் பிரதேசத்தில் இருந்து சென்ற மக்களை உயிலங்குள சோதனைச்சாவடியில் வைத்து இராணுவத்தினர் திருப்பியனுப்பி பேரணியை குழப்ப முயற்சித்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ச)

### கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை

## அதிபருக்கு எதிராக ம.உ. ஆவில் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலையில் தனது மகன் கல்வி கற்க அனுமதி வழங்கப்படவில்லை எனக் குறிப்பிட்டு தந்தை ஒருவர் பாடசாலை அதிபருக்கெதிராக யாழ். மனித உரிமைகள் ஆணைக் குழுவில் முறையிட்டுள்ளார்.

கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த சி.மகேந்திரன் என்பவரே மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்தவர் ஆவார். தனது வீட்டிலிருந்து 500 மீற்றர் தொலைவில் கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை உள்ளபோதும் தனது மகன் அங்கு கல்வி கற்க அனுமதி தராது, தொலைவிலுள்ள ஏனைய மாணவருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக அவர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார். (த-05)

# மக்களின் வாழ்க்கையை சகஜ நிலைக்குக் கொண்டுவரவே வெளிநாடுகளின் உதவிகள் பயன்படுத்தப்பட வேண்டும்

## பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் வலியுறுத்து

(கொழும்பு)

**இலங்கைக்குக் கிடைக்கப் பெறும் வெளிநாட்டு உதவிகள் அனைத்தும் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கையை சகஜ நிலைக்குக் கொண்டு வருவதற்கு ஏற்ற நடவடிக்கைகளுக்காகச் செலவிடப்படவேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகப் பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் வலியுறுத்தியுள்ளார்.**

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தற்போது வெளிநாட்டில் இருந்து பெருந்தொகையான உதவிகள் இலங்கைக்குக் கிடைத்த வண்ணமுள்ளன. தற்போது நிவாரணத் திட்ட நடவடிக்கைளில் ஏற்படுத்தப்படவேண்டிய மாற்றங்கள் தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஜனாதிபதி கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான புனர்வாழ்வு நடவடிக்கைக்காக ஆரம்ப நடவடிக்கையாக குடும்பம் ஒன்றுக்கு 25 ஆயிரம் ரூபாய் வீதம் வழங்கப்பட வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சி அரசுக்கு யோசனை கூறியுள்ளது.

அத்துடன், மூன்றுமாத காலத்திற்கு மாதாந்தம் 5 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவு வழங்கப்பட வேண்டும் என்றும் அரசாங்கத்தை எமது கட்சி கேட்டுக்கொண்டுள்ளது.

புனர் நிர்மாணத் திற்கென வழங்கப்படும் வெளிநாட்டு உதவிகளை கண்காணிப்பதற்கு பாராளுமன்றத்தில் சகல அரசியல் கட்சி களையும் உள்ளடக்கிய தான விசேட குழுவொன்று நியமிக்கப்பட வேண்டும்.

அரச கட்டுப்பாடற்ற பகுதிகளில் நிவாரணப் பணிகளை மேற் கொள்வதற்கு அரசாங்கம் விடுதலைப் புலிகளின் உதவியை நாடவேண்டும்.

தேர்தல்கள் நடத்துவது பற்றி ஜனாதிபதி விடுத்துள்ள அறிக்கை குறித்தும் ஐக்கிய தேசிய கட்சி மகிழ்ச்சி அடைந்து இருக்கிறது.

அரசியலமைப்பின்படி தேர்தல்கள் உரிய நேரத்தில் நடாத்தப்படவேண்டியது அவசியமானதாகும். அதன்படி அடுத்த ஜனாதிபதித் தேர்தல் இந்த வருட இறுதிக் குள் நடாத்தப்படவேண்டும்.

அதனை ஜனாதிபதியும் உறுதிப்படுத்தியுள்ளார். எனவே அது எமக்கும், நாட்டு மக்களுக்கும் நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது.

அம்பாந்தோட்டையில் ஜனாதிபதி 5 வருடங்களுககுள் தேர்தல்கள் நடைபெறாது எனத் தெரிவித்த கருத்து பலத்த வாதப் பிரதிவாதங்களை ஏற்படுத்தியிருந்தது.

இதேவேளை, சுனாமியினால் பாதிக்கப்பட்டுள்ள நாட்டை மீண்டும் புதுப்பொலிவுடன் மீளக்கட்டியெழுப்ப தற்சமயம் அதிகளவான நிதிகள் நாட்டுக்குள் வந்து கொண்டிருக்கின்றன.



இந்த நிலையில் அவற்றை உரிய வகையில் நிர்வகிக்கும் பொறுப்புக்கள் குறித்து மக்கள் திருப்தி கொண்டிருக்கின்றார்களா என்பது அறியப்படவேண்டும்.

ஏனெனில் அந்த திருப்தியினை அறிந்து கொள்வதற்கு ஜனாதிபதித் தேர்தல், உரிய நேரத்தில் நடாத்தப்படவேண்டும் எனவும் ஜீ.எல். பீரிஸ் மேலும் தெரிவித்தார்.

(ற-4)

## இராசி பலன்

**29.01.2005 (தை 16 சனிக்கிழமை)**
**சதுர்த்தி முன்னிரவு 10.11 மணிவரை**
**பூரம் மு.ப 8.31 மணிவரை**
**இராகுகாலம் 09.36 - 11.06 மணிவரை**
**சுபநேரம் 03.36 -05.06 மணிவரை**
**சங்கடகர சதுர்த்தி விரதம்**

| | |
|---|---|
| மேடம் | சுகவாழ்வு, திடீர் பயணம், பண வருவாய், எடுத்த கருமங்கள் கை கூடும். |
| இடபம் | வியாபார நன்மை, மனக்கவலை, காரிய இடையூறு, ஆரோக்கியக் குறைவு. |
| மிதுனம் | பயந்த சுபாவம், போசன சுகம், அற்பர் உறவு, வேலைச் சுமை. |
| கடகம் | இனிய சம்பவம், வாக்கு மேன்மை, அந்நியர் சந்திப்பு, பணவருவாய். |
| சிங்கம் | மதிப்புக் குறைவு, பொருள் விரயம், உணர்ச்சிவசப்படுதல், முயற்சி தாமதம். |
| கன்னி | நல்ல முயற்சி, ஆழ்ந்த சிந்தை, நண்பர்கள் சந்திப்பு, சயன சுகம். |
| துலாம் | தந்தை வழி உறவு, கோபப்படுதல், காரிய தாமதம், பணவிரயம். |
| விருச்சிகம் | தொழில் சிந்தை, பொருள் சேர்க்கை, காரிய அனுகூலம், உற்சாகம். |
| தனுசு | சுபநிகழ்வு, நல்ல செய்தி, பிறர் உதவி, காரிய அனுகூலம். |
| மகரம் | ஆன்றோர் மதிப்பு, உடல் உழைப்பு, வீண் பயம், வயிற்றுக் கோளாறு. |
| கும்பம் | வீண் தொல்லை, உடல் நலக் குறைவு, பிரயாண பயம், முயற்சி தாமதம். |
| மீனம் | போசன நன்மை, கெளரவமான நிலை, அபூர்வ சந்திப்பு, முயற்சி தாமதம். |

**பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது**
**- வளவன்**

# நெல்லைக் கொள்வனவு செய்வதற்கு அரசு 75 கோடி ரூபாவை ஒதுக்கியுள்ளது

(கொழும்பு)

பெரும்போகத்தில் அறுவடை செய்யப்படும் நெல்லில் 2 இலட்சம் மெற்றிக்தொன் நெல்லை அரசு விவசாயிகளிடம் இருந்து கொள்வனவு செய்யவுள்ளது.

இதற்காக அரசு 75 கோடி ரூபாவை ஒதுக்கியுள்ளது.

இதற்கமைய ஒரு கிலோ சம்பா மற்றும் சிவப்பு அரிசி நெல் 16.50 சதத்திற்கும், நாட்டரிசி நெல் 15.50 சதத்திற்கும் கொள்வனவு செய்யப்படவுள்ளது.

இதேவேளை, விவசாயிகளிடம் இருந்து நெல்லைக் கொள்வனவு செய்யும் தனியார் துறை வர்த்தகர்கள் நெல் கொள்வனவு நிலையங்களில் தம்மைப் பதிவுசெய்ய வேண்டும் என விவசாய அமைச்சர் அனுர குமார திஸநாயக்க அறிவித்துள்ளார்.

இந்தப் பணிகளை மேற்பார்வை செய்வதற்காக சம்பந்தப்பட்ட பிரதேசங்களில் 25 பட்டதாரிகள் நியமிக்கப்படுவார்கள் என்றும், மட்டக்களப்பு, கிளிநொச்சி அம்பாறை போன்ற பிரதேசங்களிலும் நெல் கொள்வனவு நிலையங்கள் ஸ்தாபிக்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

(க-60)

## சிறு விளம்பரம்


### வெளிவந்துவிட்டது

உலகத் தமிழர் குரல் 8 ஆவது சஞ்சிகை பல பக்கங்களுடன் வெளிவந்து விட்டது. யாழ். நகரில் எங்கும் கிடைக்கும். ரூபா 40/- தபால் / காசுக்கட்டளை ரூபா 50 /- அனுப்பி அஞ்சலில் பெறலாம். ஆ.சண்முகலிங்கம், பரமநாதன் ஹவுஸ், மானிப்பாய் வீதி, தாவடி கொக்குவில். (9251)

### கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும்

கடந்த ஞாயிற்றுக்கிழமை (23.01.2005) சித்தன்கேணிச் சந்திக்கும் பொன்னாலை சந்திக்கும் இடையில் 11/2 பவுண் கைச்சங்கிலி தவறவிடப்பட்டது இதில் 'அபி' என பொறிக்கப்பட்டுள்ளது கண்டெடுத்தவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். தொடர்புகளுக்கு பாக்கியரத்தினம் கட்டிடப் பொருள் விற்பனை நிலையம் 163, 165 பிரதான வீதி, சங்கானை. தொ.பே:- 0776154344. (9252)

# கண்டம் விட்டு கண்டம் செல்லும் உடைமைகள்



வாகரையை வந்தடைந்த தாய்லாந்துத் தேர்

சுனாமி பேரலையால் அள்ளுண்டு தாய்லாந்து தேர் ஒன்று இலங்கையின் வாகரை 'கடற்கரையை வந்து ஒதுங்கியுள்ளது.

இது இவ்வாறிருக்க, தென்னாபிரிக்காவின் வடக்குக் கடலோரத்தில் உள்ள பிளிதிடேல் பீச்சில் இலங்கையிலிருந்த அனுமன் சிலையொன்று கரையொதுங்கியுள்ளது.

மேற்படி அனுமன் சிலை 25 கிலோ எடை கொண்டதாகவும் அது முழுவதும் பெயிண்டிங் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சிலையின் அடிப்பகுதியில் 'ஸ்ரீலங்கா' என்று எழுதப்பட்டுள்ளது. எனவே இந்த அனுமன் சிலை இலங்கையில் தயாரானது என்று தெரியவந்துள்ளது.

கடந்த மாதம் இலங்கை கடலோரத்தை சுனாமி பேரலைகள் தாக்கியபோது, இந்த அனுமன்சிலை கடலுக்குள் இழுத்துச் செல்லப்பட்டதாகத் தெரிகிறது. கடந்த ஒரு மாதகாலமாக கடலில் மிதந்தபடி இது பயணம் செய்துள்ளது.

கடல் அலைகளின் போக்கில்போன அந்த சிலை கடைசியில் தென்னாபிரிக்கா வில் கரை ஒதுங்கி உள்ளது. இது சுனாமி அலைகளால் இழுத்துச் செல்லப்பட்டது தான் என்பதை தென்னாபிரிக்காவில் உள்ள கேப்டவுன் பல்கலைக்கழக ஆய்வாளர் கஸ் உறுதி செய்துள்ளார்.

இந்தியப் பெருங்கடல் பகுதியை ஒட்டி உள்ள நாடுகளை துவம்சம் செய்த சுனாமி அலைகள் நிறைய உடைமைகளையும் கடலுக்குள் வாரி சுருட்டிச் சென்றுவிட்டது. அந்த பொருட்களுடன் செருப்பு, உடைகள் போன்றவை கடல் அலைகளில் மிதந்தபடி உலகின் மற்ற கண்டங்களுக்கும் சென்றுவிட்டன.

பசுபிக் மற்றும் அட்லாண்டிக் கடல் பகுதிகளில் இந்த உடைமைகள் மிதப்பதாகத் தெரியவந்துள்ளது. (ற)


நிறைஞ்சனாஸ்
சங்கானை
விக்ரம், கிரண் நடித்த
ஜெமினி
கா.நே -11.00, 2.45, 6.00 (பி.நே)

மனோகரா திரையரங்கு
யாழ்ப்பாணம்
இலங்கையிலும், இந்தியாவிலும் ஒரேதின வெளியீடு
விஜய், த்ரிஷா மற்றும் பலர் நடித்த
திருப்பாச்சி
இசை தினா
இயக்கம் பேரரசு
கா.நே- 10.30, 2.30, 6.30, 9.30 (பி.நே)

நாதன்ஸ்
யாழ்ப்பாணம் (குளிரூட்டியது)
3 வது வசூல் வெற்றி வாரமாக ஓடிக்கொண்டிருக்கிறது
பிரசாந், சினேகா, வடிவேலு, மஞ்சுளா இன்னும் பலர் நடித்த
ஆயுதம்
தினசரி 4 காட்சிகள்
10.30, 2.30, 6.30, 9.30 (பி.நே)

# தமிழ் மக்களின் எதிர்பார்ப்புத் தவறானது



**ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையே ஏற்பட்டுள்ள கையெழுத்திடப்படாத கனவான்கள் ஒப்பந்தத்தின் மூலம் தென்னிலங்கை அரசியலில் ஜே.வி.பி. ஓரங்கட்டப்பட்டுள்ளது. சமாதானத்திற்கும், இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்விற்கும் முட்டுக்கட்டையாக இருக்கும் ஜே.வி.பி. அரசியலிலிருந்து புறந்தள்ளப் பட்டுள்ளமை மக்கள் மத்தியில் பாரியளவிலான எதிர்பார்ப்புக்களைத் தோற்றுவித்துள்ளது. இது குறித்து ஐக்கிய தேசியக்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரன் எமக்களித்த செவ்வி இது.**

''ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஐக்கியதேசியக் கட்சிக்குமிடையே ஏற்பட்டுள்ள இணக்கப்பாடு ஓர் அரசியல் ரீதியான இணைவு அல்ல; இந்த இணைவின் நோக்கம் சுனாமியால் பாதிக்கப்பட்ட தென்னிலங்கையை மீளக்கட்டியெழுப்புவதே.

இதனால் எதுவித அரசியல் மாற்றமும் உருவாகாது. அவ்வாறு மாற்றம் உருவாகுமென எதிர்பார்ப்பதும் தவறு'' இப்படிக் கூறியிருக்கிறார் ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான தி.மகேஸ்வரன்.

ஐக்கியதேசியக் கட்சிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குமிடையே ஏற்றப்பட்டுள்ள இணக்கப்பாடு குறித்து வலம்புரிக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

> **''சோமவன்ச வெளியேற்றப் படுவதை ஜே.வி.பி. ஒருபோதும் விரும்பாது. எனவே, சுதந்திரக் கட்சியை விட்டுப்பிரிந்து செல்ல ஜே.வி.பியிற்கு ஒருபோதும் துணிவு வராது''**

அந்த செவ்வியில் மகேஸ்வரன் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது;

போழிப்புக்களைச் சந்தித்த நாட்டை அரசியல் பேதமின்றி மீளக்கட்டியெழுப்புவது என்ற கொள்கையின் அடிப்படையில் இவ்விரு கட்சிகளும் தமக்குள் ஓர் இணக்கநிலைக்கு வந்துள்ளன.

உண்மையில் ஐக்கிய தேசியக் கட்சியால் அரசுக்கு வழங்கப்படும் ஆதரவு நாட்டை மீளக் கட்டியெழுப்புவதற்காகவே வழங்கப்படுகிறதே தவிர, அரசாங்கத்தின் ஆட்சியைப் பலப்படுத்துவதற்காக இவ்வாதரவு வழங்கப்படவில்லை.

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட நாட்டை இன, மத, மொழி பேதமின்றிக் கட்டி யெழுப்ப வேண்டும் என்ற எமது தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் வேண்டுகோளுக்கிணங்க இந்த இணக்கப்பாட்டிற்கு எம் கட்சியினர் இணங்கினர்.

எனினும், இந்த இணைவு சம்பந்தப்பட்ட விடயத்தில் நான் உடன்படுவதற்குத் தயாராக இல்லை.

ஏனெனில், முற்றுமுழுதாக அழிந்துபோன தென்னிலங்கை மக்களின் வாழ்வியலை மீளக் கட்டியெழுப்பும் நோக்குடன் ஏற்படுத்தப்பட்டதே இந்த இணக்கப்பாடு.

இதனால் தமிழ் மக்களுக்கு எந்தவிதமான பலனும் கிடைக்கப்போவதில்லை. இந்த இணக்கப்பாட்டின் மூலம் பெருந்தொகையான சர்வதேச உதவிகள் சிங்களவர்களுக்குக் கிடைக்கப் போகிறது.

இதனால் நான் பெரும்பான்மை இனக்கட்சியில் அங்கத்தவனாக இருந்தாலும் தமிழருக்குப் பலன் கிடைக்காத இம்முயற்சிக்கு ஒருபோதும் துணைபோக மாட்டேன்.

இவ்விணக்கப்பாட்டில் கூடுதலான ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் அதிக ஈடுபாடு காட்டுகிறார்கள். ஏனெனில் அரசின் மீள்கட்டுமான நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பதன் மூலம் தாம் பிரதிநிதித்துவப்படுத்தும், நம்பிவாக்களித்த மக்களுக்கு ஓர் வளமான எதிர்காலத்தை ஏற்படுத்திக் கொடுக்கலாம் என்ற எதிர்பார்ப்பில்தான். மொத்தமாகச் சொன்னால் சிங்கள மக்களையும் சிங்களப் பிரதேசங்களையும் வளப்படுத்துகின்ற விடயத்தில் எதிர்க்கட்சியாக இருப்பினும் சரி ஆளும் கட்சியாக இருப்பனும் சரி அனைவரும் ஒன்றுபட்டே செயற்படுவார்கள்.

இவ்வாறு பெரும்பான்மை இனத்தை வளப்படுத்தும் நோக்கில் பெரும்பான்மைக் கட்சிகள் தமக்குள் ஏற்படுத்திக் கொண்டுள்ள இணக்கப்பாட்டினுள் தமிழ் மக்களது நலன்களை முக்கியத்துவப்படுத்துவதென்பது சாத்தியமற்ற விடயம். என்றாலும், பாதிக்கப்பட்ட மக்களுக்கென சர்வதேசத்தினால் வழங்கப்படும் உதவிகள் இன, மொழி, மத பேதங்களுக்கு அப்பாற்பட்டு சகலருக்கும் கிடைக்கச் செய்ய வேண்டியது ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினர்களதும் கடமையாகும்.

இந்தவகையில் பார்க்கின்ற போது வடக்கு-கிழக்கைச் சேர்ந்த தமிழ்க்கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்கள் 22 பேரும் அரசுக்குரிய அழுத்தங்களைக் கொடுப்பதன் மூலம்தமிழ் மக்களுக்கு நன்மைகிடைக்க வாய்ப்புண்டு.

பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கான உதவிகள் விடுதலைப் புலிகள் ஊடாகவும் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபையூடாகவும் பகிர்ந்தளிக்கப்படல் வேண்டுமென்பது தமிழ் மக்களின் அபிலாஷையாகவுள்ளது.

ஆனால் அரசும் அதுசார்ந்துள்ள கட்சியான ஜே.வி.பியும் இந்த விவகாரத்தில் முரண்பாடான போக்கையே கடைப்பிடித்துவருகின்றது.

இந்நிலையில்தான் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்குமிடையே ஏற்பட்டிருக்கும் இணக்கப்பாடு தமிழ் மக்களுக்கும், நாட்டிற்கும் ஒரு நல்ல எதிர்காலத்தையும் அரசியல் மாற்றத்தையும் உருவாக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

ஆனால் உண்மை நிலை இதுவல்ல. நாட்டைக்கட்டியெழுப்பும் நடவடிக்கைகளில் ஐக்கிய தேசியக்கட்சி அரசுக்கு ஆதரவளிப்பினும் ஜனாதிபதித் தேர்தலை பிற்போடும் அரசின் முயற்சிகளுக்கோ அரசினை பலப்படுத்தும் முயற்சிகளுக்கோ அதுதான் ஆதரவை வழங்காது.

ஜனாதிபதி தேர்தலைப் பிற்போட்டு ஜனநாயக விரோதமான அரசியல் நடவடிக்கைகளில் அரசு ஈடுபட முன்வந்தால் அவற்றை எமது கட்சி கடுமையாக எதிர்க்கும். வீதிகளில் இறங்கி போராட்டங்களிலும் ஈடுபடும்.

ஐக்கிய தேசியக் கட்சியும் சுதந்திரக்கட்சியும் நாட்டைக் கட்டியெழுப்பும் நடவடிக்கைக்காக இணைந்தமையை ஜே.வி.பி தனக்கு எதிரான செயற்பாடாக கருதுகிறது.

ஏனெனில் அரசில் அண்டிப் பிழைத்துக் கொண்டிருந்த ஜே.வி.பியினரின் நாடகங்கள் இவ்விரு கட்சிகளுக்கிடையான இணைவு மூலம் தவிடு பொடியாகியுள்ளது. இதனால் தான் ஜே.வி. பியினருக்கும் சுதந்திரக் கட்சியினருக்குமிடையே பிளவு உண்டாகியுள்ளது.

> **''மக்கள் விடுதலை முன்னணிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையே தற்போது தோன்றியுள்ள மோதல் நிலையினால் ஆட்சி மாற்றமோ அரசியல் தீர்வோ ஏற்படாது. அதேசமயம், ஜனாதிபதியின் சர்வாதிகாரப் போக்கிற்கு ஐக்கியதேசியக் கட்சி ஒருபோதும் துணைபோகாது. மீறி ஜனாதிபதி தன் சர்வாதிகாரத்தை நிலைநாட்ட முற்பட்டால் ஐக்கிய தேசியக் கட்சி போராட்ல்ல்டங்களில் குதிக்கும்''**

ஜே.வி.பியினருக்கும் சுதந்திரக்கட்சியினருக்கும் இடையே ஏற்பட்டுள்ள அரசியல் பூகம்பம் தற்காலிகமானது. இவர்கள் மீண்டும் இணைந்து தமது பேரினவாதத்தை வலுப்படுத்துவார்கள். இதனை நான் என் கடந்தகால அரசியல் அனுபவத்தினைச் சான்றாக வைத்துக் கூறுகிறேன்.

இதனால் அவர்களின் பிளவு நிரந்தரமானது என நம்பமுடியாது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியால் ஜே.வி.பியினரை எதிர்த்துக் கொண்டு தொடர்ந்தும் ஆட்சி செய்ய முடியாது.

ஏனெனின் பெரும்பான்மையான அமைச்சர்கள் ஜே.வி.பியினரது இன, மத போக்குகளுக்கு உடன்படுவர். இதேபோல் இப்பிளவு நிரந்தரமாகுமானால் கிருமினல் குற்றச்சாட்டில் உள்ள ஜே.வி.பி தலைவர் சோம வன்ச அமரசிங்க மீண்டும் நாட்டை விட்டு வெளியேற வேண்டி ஏற்படும். இதனை ஜே.வி.பி. விரும்பாது.

**செவ்வி: க.பவன்**

எனவே இந்தப் பிளவு நிரந்தரமானது என்றோ இதன் மூலம் தமிழருக்குச் சாதகமான அரசியல் மாற்றம் உருவாகுமென்றோ எதிர்பார்க்க முடியாது.

இதேபோல், ஐக்கிய தேசியக் கட்சியும் தனது இறைமைகளை இழந்து அரசின் ஜனநாயக விரோதச் செயல்களுக்குத் துணைபோகாது. இறுதி வரை ஜனநாயகத்தைக் காக்கப் போராடும்.

ஐக்கியதேசியக் கட்சியானது தன் தலைமையிலான ஜனநாயக ஆட்சியை நாட்டில் நிறுவி, நாட்டினைக் கட்டியெழுப்பும் 15 வருடகால இலக்குகளுடன் ஜனாதிபதி தேர்தலை எதிர்கொள்ளத்தயாராகி வருகிறது. இதற்கான விஞ்ஞாபனத்தையும் அது வெளியிடவுள்ளது. ஜனாதிபதி தனது ஆட்சிக்காலத்தை 5வருடங்கள் என்ன 5நிமிடங்கள் கூட நீடித்திருக்க அனுமதிக்கமாட்டோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

# நிவாரணப் பணிக்கான கூட்டமைப்பில் புலிகளையும் இணைக்க வேண்டும்!

## ஜனாதிபதியிடம் தமிழ்க் கட்சிகள் கூட்டாகக் கோரிக்கை

ஜே.வி.பியின் மிரட்டலுக்கு அடிபணியாது ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, சுனாமி அனர்த்தம் தொடர்பான நிவாரணப் பணிக்கான பொதுக் கட்டமைப்பில் தமிழீழ விடுதலைப் புலிகளையும் இணைத்துச் செயற்பட முன்வரவேண்டும்.

இவ்வாறு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி, மேல் மாகாண மக்கள் முன்னணி ஆகிய கட்சிகள் கூட்டாகக் கோரிக்கை விடுத்துள்ளன.

நிவாரணப் பணிக்கான பொதுக் கட்டமைபில் தமிழீழ விடுதலைப் புலிகளையும் இணைப்பதன் மூலம் இருதரப்புக்குமிடையிலான நம்பிக்கையினையும் கட்டியெழுப்பி சமாதான முயற்சிகளையும் அதன் மூலம் கட்டி எழுப்பமுடியும் என்றும் இக்கட்சிகள் தெரிவிக்கின்றன.

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட நாட்டை மீளக் கட்டியெழுப்புவதற்கான மனிதாபிமான நிவாரணப் பணிக்கான பொதுக் கட்டமைப்பில் தமிழீழ விடுதலைப் புலிகளையும் இணைத்துப் பணிகளை அரசாங்கம் முன்னெடுக்கவேண்டும்.

ஜே.வி.பி.யின் மிரட்டல்களுக்கு அடிபணியாது இம்முயற்சியில் ஜனாதிபதி ஈடுபட வேண்டும் என்று தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் தெரிவித்தார்.

நிவாரணப் பணிக்கான பொதுக் கட்டமைப்பில் தமிழீழ விடுதலைப் புலிகளை இணைத்துக் கொள்வதன் மூலம் நம்பிக்கையினைக் கட்டியெழுப்பி அதன் மூலமாக சமாதான முயற்சியையும் முன்னெடுக்க வாய்ப்புக்கிட்டும்.

இவ்வாறு ஜனாதிபதி சமாதான முயற்சியினை முன்னெடுப்பாரேயானால் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்கும் என்றும் ரவிராஜ் தெரிவித்தார்.

சமாதான முயற்சி முன்னெடுக்கப்பட்டால் அரசாங்கத்துக்கு ஐக்கியதேசியக் கட்சியும் ஆதரவு வழங்குவதாகத் தெரிவித்துள்ளது.

எனவே, ஜே.வி.பி.யின் மிரட்டல்களைக் கண்டு ஜனாதிபதி அஞ்சத் தேவையில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.(க-9)

# புலிகளின் பகுதிக்குள்

# பிரதிப் பொலிஸ் மா அதிபர்

(மட்டக்களப்பு)

முன்னறிவிப்பு எதுவுமின்றி அரச கட்டுப்பாட்டுப் பிரதேச எல்லையைத் தாண்டி புலிகளின் பகுதிக்குள் பிரவேசித்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஒருவரைத் தடுத்து விசாரித்து விட்டு, மனிதாபிமான அடிப்படையில் அவரை விடுதலைப் புலிகள் விடுவித்தனர்.

இரண்டொரு தினங்களுக்கு முன்னர் பிரதிப் பொலிஸ் மா அதிபர் பி.தங்கவேலுக்கே இந்த நிலை ஏற்பட்டது. ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணப் பொருட்களுடன் மட்டக்களப்பிற்குச் சென்று அவர் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப் பொருட்கள் வழங்கிவிட்டு, ஊரைச் சுற்றிப்பார்க்கத் தனது வாகனத்தில் சென்றபோதே வழி தவறி விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் நுழைந்தார் என்று கூறப்படுகிறது. (ற)

# இன்று ஒரு தகவல்

## வயிற்றுக்குள் ஒரு குழப்பம்

கடைத்தெருப் பக்கத்தில் ஒரே கூட்டம் யாரோ வித்தை காட்டிக்கொண்டிருக்கிறார்கள் போலிருக்கிறது. நானும் போய் எட்டிப்பார்த்தேன். நான் நினைத்தது சரி தான். ஒரு ஆள் ஒரு பாம்பைப் பிடித்து விழுங்கிக்கொண்டிருந்தார். அந்தப் பாம்பும் உயிருடன் அவரது வயிற்றுக்குள் போய் விட்டு மீண்டும் உயிருடன் வெளியே வந்துவிட்டது ஆச்சரியம்தான்.

அவருக்கும் துணிச்சல் அதிகம். அந்தப் பாம்புக்கும் துணிச்சல் அதிகம். மனிதனின் உடம்பிற்குள்ளேயே இவ்வளவு தைரியமாகப் போய் வருகிறதே! மனிதன் இது போன்ற வேலையை எல்லாம் சும்மா ஒரு வித்தைக்காக செய்து கொண்டிருக்கிறான். ஆனால் இயற்கை சில இடங்களில் இதுபோன்ற வித்தையை உண்மையிலேயே செய்துகொண்டிருக்கிறது.

சில நத்தைகள் உயிருடன் மீனின் வயிற்றுக்குள் போய் மீண்டும் உயிருடன் வெளியே வருகின்றன. நண்டு, நத்தை போன்றவற்றிற்கெல்லாம் ஓடு உறுதியாக இருக்கிறதே! எதற்காக? எதிரிகள் கடித்தால் தப்பித்துக் கொள்ளத்தான்.

கடலில் உள்ள சிலவகை நத்தையை சில வகை மீன்கள் அப்படியே பிடித்து விழுங்கிவிடும். அந்த நத்தைக்கெல்லாம் இயற்கை ஒரு வசதியைச் செய்து கொடுத்திருக்கிறது. அந்த நத்தை ஓடுகளில் ஒரு கதவு உள்ளது. இந்த கடல் நத்தை ஒரு மீனின் வயிற்றுக்குள் போய்விடுகிறதென்று வைத்துக்கொள்ளுங்கள். அந்தக்கதவு உடனே இறுகமூடிக்கொள்ளும். மீனின் ஜீரண நீர் தனது உடலில் படாமல் பார்த்துக்கொள்ளும். அது உடலில் பட்டால் உடல் கரைந்துவிடும். உடலில் படாவிட்டால் ஒன்றும் ஆகாது.

அந்த நத்தை எந்தவிதமான சேதமும் இல்லாமல் மீனின் ஜீரணப்பாதையின் வழியே பயணித்துக்கொண்டு வெளியே வந்துவிடும். ஆச்சரியமான இந்த விஷயத்தை அமெரிக்க ஆராய்ச்சியாளர் ஒருவர் கண்டுபிடித்தார்.

இயற்கை இதுபோல் நத்தைக்கு மட்டும்தான் உதவியிருக்கிறது என்று நினைக்கிறீர்களா? இது தப்பித்துப் போக முடியாதபடி சிலவகை மீனுக்கும் உதவியிருக்கிறது. பிள்ளையையும் கிள்ளிவிட்டு தொட்டிலையும் ஆட்டிவிடுவது என்று சொல்வார்களே அதுமாதிரி எல்லாவகை மீனாலும் நத்தையை விழுங்கி ஜீரணிக்க முடியாது. ஆனால் சில சிறிய வகை மீன்கள் மட்டும் நத்தையை விழுங்கி ஜீரணித்துவிடும். அது எப்படி என்று நீண்டகாலமாக விஞ்ஞானிகளுக்குப் பெரும் அதிசயமாக இருந்தது. அதன்பின் தான் அந்த ரகசியம் என்னவென்று கண்டுபிடித்தனர்.

இந்தவகை மீன்களுக்கு தாடை வலுவாக இருக்கும். விஷேடமான பல் அமைப்பு இருக்கிறதாம். சிலவற்றிற்கு அலாதியான எலும்பு அமைப்பு இருக்கிறதாம்.இந்த மீன்கள் நத்தையை வாயில் போட்டு ஒரு அழுத்து அழுத்துகிறது. நத்தை ஓட்டில் ஓட்டைவிழுந்து விடும். அந்தத் துளையின் வழியே மீனின் வயிற்றில் உள்ள ஜீரண அமிலம் நத்தையின் உடலுக்குள் போய்விடும் அதன்பின் அவ்வளவுதான் நத்தை ஜீரணமாகிவிடும்.

சில நத்தைகளின் ஓட்டில் சரியாக ஓட்டைவிழுவதில்லை. அவை சேதமில்லாமல் தப்பித்து வெளியே வந்துவிடும். அவற்றிலும் அதிர்ஷ்டசாலிகள் உண்டு. இப்படி மீனின் வயிற்றினுள்ளே நத்தைகள் போய்வருவதில் இன்னொரு நன்மையும் உள்ளது.

ஒரு நத்தையை ஒரு மீனோ அல்லது பறவையோ விழுங்கிவிடுகிறது என்று வைத்துக்கொள்ளுங்கள். அதன்பின் அந்த மீன் அல்லது பறவை நீண்டதூரத்திற்கு தள்ளிப் போய்விடும். அங்கே போனதற்குப் பின்பு நத்தை நலமாக வெளியே வரும். புதிய இடத்தில் குடியேறி இனப்பெருக்கம் செய்ய ஆரம்பித்துவிடும். செலவில்லாமல் பயணம் செய்துவிடுகிறதே. இது ஒரு பெரிய விஷயமல்லவா? நத்தை தானாக நகர்ந்து போவதென்றால் எந்தக் காலத்தில் போய்ச் சேர்வது!

மனிதர்களிலும் சிலருக்கு சில பிரச்சினைகள் உண்டு. எதனைச் சாப்பிட்டாலும் சரியாக ஜீரணம் ஆவதில்லை. அவர்களைப் பொறுத்தவரை எல்லாம் அந்த நத்தை மாதிரித்தான்.

அப்படிப்பட்ட ஒருவர் ஒரு டாக்டரைத் தேடிப்போனார். "டாக்டர் எனக்கு எதுவும் ஜீரணமாவதில்லை" என்றார். டாக்டர் கொஞ்சம் மருந்துகளைக் கொடுத்தனுப்பினார். இவர் வாங்கிக்கொண்டு போனார். மறுநாளும் அந்த ஆள் டாக்டரைத் தேடிவந்து "ஜீரணமாவதற்கு ஏதாவது மருந்து கொடுங்கள் டாக்டர்" என்றார். 'நேற்றுத்தான் தந்தேனே' என்றார் டாக்டர். "அப்படி இல்லை டாக்டர். நேற்று நீங்கள் தந்தது உணவு ஜீரணமாவதற்கு இன்று நான் கேட்டதுநீங்கள் தந்த மருந்து ஜீரணமாவதற்கு" என்றார் அந்த ஆள்.

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

# அரசும் புலிகளும் இணைந்து செயற்படுகின்றமை சமாதானத்திற்கான நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது

## பிரஸ்லஸ் மாநாட்டில் உலக நாடுகள் கூட்டறிக்கை

(கொழும்பு)

நிவாரணப் பணிகளில் அரசும், புலிகளும் இணைந்து செயற்பட வேண்டுமென இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் கோரிக்கை விடுத்துள்ளன.

கடந்த டிசம்பர் 26 ஆம் திகதி இடம்பெற்ற சுனாமி அனர்த்தத்தையடுத்து இலங்கையில் சமாதான முன்னெடுப்பை மீளாய்வு செய்வதன் பொருட்டு ஐரோப்பிய யூனியன், ஜப்பான், நோர்வே, ஐக்கிய அமெரிக்கா ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் கடந்த செவ்வாய்க்கிழமை பிரஸ்லஸ்ஸில் கூடினர்.

அங்கு நடைபெற்றமாநாட்டில் கலந்துகொண்ட மேற்படி 4 நாடுகளின் பிரதிநிதிகள் இலங்கையில் ஏற்பட்ட அனர்த்தத்திலிருந்து நாட்டை மீளக்கட்டியெழுப்ப இலங்கை அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் காட்டிவரும் கரிசனையை வரவேற்றுள்ளனர்.

மேற்படி சந்திப்பின் பின்னர் அவர்கள் கூட்டறிக்கை ஒன்றையும் வெளியிட்டுள்ளனர். இந்த அறிக்கையின் விபரம் வருமாறு,

சமய, மொழி, சமூக அரசியல் பேதம் பாராது இலங்கை அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் மனிதாபிமான நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருகின்றனர்.நெருக்கடிக்கு மத்தியிலும் சமாதானத்தை முன்னெடுப்பதற்கான நம்பிக்கையும் நாட்டை மீளக் கட்டியெழுப்புவதற்கான வாய்ப்புக்களும் தற்போது உருவாகியுள்ளன என அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ற-9)

# நிவாரணப் பணிகளில் வெளிப்படைத் தன்மையில்லை

## பவ்ரல் அமைப்பின் தலைவர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தின் பின்னர் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள நிவாரணப்பணிகள் வெளிப்படையான தன்மையினைக் கொண்டிருக்க வேண்டும் என சுயாதீன தேர்தல்களுக்கான அமைப்பான பவ்ரல் அமைப்பின் தலைவர் கிங்ஸ்லி றொட்றிக்கோ தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் கொழும்பில் வைத்து ஊடகமொன்றுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

சுனாமி அனர்த்தத்தின் பின்னரான நிவாரணப் பணிகளில் பாரிய முரண்பாடுகள் நிலவுகின்றன. இந்தநிலையில், நிவாரணப்பணிகள் வெளிப்படையாக இடம்பெறுகின்றனவா என்பதை முதலில் எமது அமைப்பு கண்காணிக்கவிருக்கின்றது.

இதுதொடர்பான எமது பணிகள் எதிர்வரும் பெப்ரவரி மாதம் முதலாம் திகதியில் இருந்து ஆரம்பிக்கப் படவுள்ளன என்றும் கிங்ஸ்லி ரொட்றிக்கோ மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, கிங்ஸ்லி ரொட்றிக்கோவின் மேற்படி குற்றச்சாட்டை மறுத்துள்ள ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் மனோதித்தவெல நிவாரணப் பணிகளில் உரியநடைமுறைகள் கடைப்பிடிக்கப்படுவதாகத் தெரிவித்தார்.

(ற-4)

# சுனாமியால் ஏற்பட்ட இழப்புக்களுக்கு எம் மீது குற்றஞ் சுமத்துவது தவறு

## ரயில்வே திணைக்கள அதிகாரிகள் மறுப்பு

(கொழும்பு)

சுனாமி அலைகளினால் முற்றாகச் சேதமடைந்த ரயில் வண்டிகள் தொடர்பாக சில ஊடகங்கள் வெளியிடும் செய்திகளுக்கு ரயில்வே திணைக்களம் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

கொழும்பில் இருந்து காலி நோக்கிச்சென்று கொண்டிருந்த ரயில் வண்டியொன்று தெல்வத்தை பிரதேசத்தில் சுனாமிப் பேரலைகளினுள் சிக்கியது.

இந்த அசம்பாவிதத்தில் ரயில் பெட்டிகள் முற்றாகச் சேதமடைந்தன. சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பயணிகள் இதில் பலியானார்கள். வாதுவ, மாத்தறை ஆகிய நகரங்களுக்கிடையில் புதிய சமிக்ஞை வலைப்பின்னல் பொருத்தப்பட்டபோதும் அம்பலாங்கொட ரயில்வே அதிபரும் ரயில்வே கட்டுப்பாட்டு அதிகாரிகளும் இவ் அனர்த்தம் குறித்து அறிவிக்கத் தவறிவிட்டார்கள் எனக் குற்றஞ்சாட்டி சில ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஆனால் இடம்பெற்றது ரயில் விபத்து அல்ல இயற்கை அனர்த்தம் தான் என்று ரயில்வே கட்டுப்பாட்டாளர் சங்கமும், ரயில் நிலைய அதிகாரிகள் சங்கமும் தெரிவித்துள்ளன.

இந்த இயற்கை அனர்த்தம் ஏற்படும்வரை ரயில்வே அதிகாரிகள் சுனாமி பற்றி அறிந்திருக்கவில்லை. இருந்தபோதிலும், அவர்கள் மேற்கொண்ட துரித நடவடிக்கையின் மூலம் 6 ரயில் வண்டிகளும் அவற்றில் பயணம்செய்த ஆயிரத்திற்கு மேற்பட்ட பயணிகளும் உயிர் தப்பித்ததாக ரயில்வே கட்டுப்பாட்டாளர் சங்கத் தலைவர் லால்ஆதிரத்ன தெரிவித்தார்.

(ற)

## கடற்கரையில் கட்டடங்கள் நிர்மாணம்

# அரசாங்கத்தின் தீர்மானத்திற்கு அரசியல் கட்சிகள் பல ஆதரவு

(கொழும்பு)

கடற்கரையில் இருந்து 100 மீற்றர் தூர எல்லைக்குள் புதிய கட்டடங்களை அமைப்பதில்லை என்ற அரசின் கொள்கைக்கு ஐக்கிய தேசியக்கட்சியைத் தவிர ஏனைய கட்சித்தலைவர்கள் மத்தியில் இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் பிற்பகல் ஜனாதிபதியின் தலைமையில் கூடிய கூட்டத்திலேயே இந்த விடயத்தில் ஏனைய கட்சித்தலைவர்கள் இந்த இணக்கத்தினை வெளிப்படுத்தியுள்ளனர்.

அரசின் இந்தக் கொள்கையை தமது கட்சி எதிர்ப்பதாக ஐக்கிய தேசியக்கட்சியின் சார்பில் இந்தக் கூட்டத்தில் பங்கேற்ற கருஜெயசூரிய தெரிவித்தார்.

இது மக்களின் அடிப்படை உரிமைகளைப் பாதிப்பதாகக்கூறிய அவர், ஒவ்வொரு பிரதேசத்தின் தன்மையின் அடிப்படையில் இந்த வரையறை மாற்றம் பெற வேண்டும் என்பதே தமது கட்சியின் கொள்கை என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, சுனாமி அனர்த்தத்தினால் வீடுகளை இழந்தவர்களுக்கு 500சதுர அடிக்குள் மீண்டும் வீடுகளை அமைக்க சுமார் 4இலட்சம் ரூபா வரை நிதியுதவி வழங்குவது குறித்தும் மேற்படி கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது.

இதனைத்தவிர சுனாமியினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வீடுகளை அமைத்துக்கொடுப்பதற்கு வெளிநாட்டுக்கும், தனியாருக்கும் திறந்தநிலை அழைப்பை விடுக்கவும் மேற்படி கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இது இவ்வாறிருக்க, பாடசாலைகளில் வகுப்பொன்றில் சாதாரணமாக 40 மாணவர்கள் அனுமதிக்கப்படுகின்ற போதும், சுனாமியினால் பாதிக்கப்பட்ட மாணவர்களின் நலன்கருதி 40க்கும் மேற்பட்ட மாணவர்களை அனுமதிப்பதெனவும் அதில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

(ற-4)

# மீளக்குடியேறுவோரால் மலேரியா பரவும் அபாயம்

(சுதுமலை)

தென் இந்தியாவிலிருந்து யாழ்.குடாநாட்டுக்கு கடல் மார்க்கமாக வந்து மீளக்குடியேறியவர்களால் மலேரியா நோய் தொற்றும் அபாயம் உள்ளதாக யாழ்.பிராந்திய மலேரியா தடை இயக்கம் அறிவித்துள்ளது.

இதன் பிரகாரம் காய்ச்சலால் பாதிக்கப்பட்ட சகல நோயாளிகளிற்கும் இரத்தப் பரிசோதனை செய்வதன் மூலம் இந்நோய் தொற்றை இனம்காண முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களைவிட தற்போது யாழ்.மாவட்டத்தில் மலேரியா காய்ச்சலால் பாதிக்கப்படுவோர் தொகை மிகக் குறைவடைந்துள்ளதாகவும் வெளி மாவட்டங்கள் மற்றும் வேறிடங்களில் இருந்து வருவோரால் இத்தொற்று ஏற்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன், யாழ்.மாவட்டத்தில் இந்நோயைப் பரப்பும் நுளம்பு இனங்கள் காணப்படுவதால் இலகுவில் தொற்று ஏற்படும் அபாயம் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(க-252)

# சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்கு தென்கொரியாவில் வேலை வாய்ப்பு

## யாழ்.வந்த அந்நாட்டுப் பிரதிநிதி தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

நேற்று யாழ்ப்பாணம் வந்த தென்கொரிய நாட்டின் உயர்மட்டக் குழுவினர் யாழ்.தொழில் நுட்பக் கல்லூரிக்கு விஜயம் செய்திருந்தனர்.

தென்கொரிய அரசின் கெய்க்கா நிறுவனப் பணிப்பாளர் சிம்சக்வைன, தூதுவராலயங்களின் பிரதிநிதி அன்சில்வான், பணிப்பாளர் யொவ்ரோய, கொரிய நாட்டின் இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதி சிங் பெங்குவான் யவ்ஒட ஆகியோர் நேற்று யாழ்ப்பாணம் வந்திருந்தனர்.



இக்குழுவினர் யாழ்.தொழில்நுட்பக்கல்லூரி அதிபர் யோகராஜன், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோரால மலர்மாலை அணிவிக்கப்பட்டு மேளதாளங்களுடன் வரவேற்றதுடன இவர்களுக்குப் பொன்னாடை போர்த்தியும் கௌரவிக்கப்பட்டது.

இவர்களை வரவேற்று உரையாற்றிய தொழில்நுட்பக்கல்லூரி அதிபர்,

எங்களது வேண்டுகோளை ஏற்று இங்கு வருகைதந்துள்ள அமைச்சர் உட்பட அனைவருக்கும் நன்றி தெரிவித்தா.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

கொரிய அரசாங்கம் எமது தொழில் நுட்பக்கல்லூரியை தரம் உயர்த்தும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அண்மையில் சுனாமியால் பாதிப்படைந்த யாழ். மாவட்டத்தில் 3 விமானங்களில் நிவாரணப் பொருட்களை வழங்கியுள்ளது.

இதுதவிர, இன்னும் 3 விமானங்களில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு உதவும் முகமாக அவர்களுக்குரிய கல்வி உபகரணங்களையும் வழங்க முன்வந்துள்ளமை தெனகொரிய அரசின் தாராள மனப்பண்பை எடுத்துக் காட்டுகின்றது எனக் குறிப்பிட்டார்.

தென்கொரிய அரசின் கொய்க்கா நிறுவனத் தலைவர் கிம்சன்வைன் அங்கு கருத்துத் தெரிவிக்கையில்,



இலங்கையில் அணமையில் ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தினால் வடக்கும் -கிழக்கும் - தெறகும் படுமோசமாகப் பாதிப்படைந்துள்ளன. இப்பிரதேசங்களை பார்வையிட்டு அப்பிரதேங்களில் மேற்கொள்ளப்படவேண்டிய புனர்வாழ்வு புனரமைப்பு நடவடிக்கைகளை ஆராய்வு செய்வதுடன், யாழ்.தொழில்நுட்பக் கல்லூரியில் எமது அரசினால் மேற்கொள்ளப்பட்டுவரும் அபிவிருத்திப் பணிகளை பார்வையடுவதுமே எமது தற்போதைய யாழ்குடாநாட்டுக்கான விஜயத்தின் நோக்கமாகும்.

மேலும் சுனாமியினால் பாதிப்படைந்த பிரதேசங்களை மீளக் கட்டியெழுப்பும் இலங்கை அரசின் செயற்பாடுகளுக்கு எமது நாடும் எதிர்காலத்தில் பூரண பங்களிப்பை வழங்கும்.

பாதிப்படைந்த பிரதேசங்களில் இருக்கின்ற தேர்ச்சி பெற்ற தொழிலாளர்களுக்கு எதிர்காலததில் தென்கொரியாவில் வேலைவாய்ப்பு பெற்றுக் கொடுக்க உத்தேசித்திருக்கிறோம் எனவும் குறிப்பிட்டார்.

(ஹ-5)

## எழுதுவினைஞர்களுக்கு இடமாற்றம்

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையில் கடமைபுரிந்து வந்த 6 எழுதுவினைஞர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

செல்வி செ.சங்கீதா, ம.பகீர்தன் ஆகிய இருவரும் வடமராட்சி வலய கல்வித்திணைக்களத்திற்கும் செல்வி. பா.கிராந்தினி வல்வெட்டித்துறை நகர சபைக்கும் திருமதி.வா.இராஜகுமார் பருத்தித்துறை நகரசபைக்கும் கி.புவனேந்திரன் வலிகிழக்கு பிரதேச சபைக்கும் நெல்லியடி பொது நூலகத்தில் கடமை புரிந்த ஆ.தெய்வேந்திரம் பருத்தித்துறை பிரதேசசபை பொது நூலகத்திற்கும் 1.2.2005 முதல் இடமாற்றம செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை ஓய்வுபெற்றுச் சென்றுள்ள பிரதேசசபைச் செயலாளர் ஏ.எம்.ஜோசப், இடமாற்றம் பெற்றுச் சென்ற செயலாளர் சிபசுபதி, சோ.ஜெயவசுரன, எஸ்நவரட்ணராஜா, வ.உதயகுமார் ஆகியோருக்கும் தற்போது இடமாற்றலாகும் எழுதுவினைஞர்களுககுமான பிரிவுபசாரவிழா எதிர்வரும 2ஆம் திகதி பி.ப.3.00மணிக்கு பிரதேச சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

(க-101)

## மந்திகை மருத்துவமனைக்கு யாழ்.வணிகர் கழகம் உதவி

(துன்னாலை)

யாழ்.வணிகர் கழகத்தினர் மந்திகை மருத்துவமனைக்கு சுமார் 2 லட்சம் ரூபா பெறுமதியுடைய பொருட்களை நிர்வாக உத்தியோகத்தர் சி.சின்னத்தம்பியிடம் கடந்த 23ஆம் திகதி கையளித்தனர்.

யாழ்.வணிகர் கழகத்தின் சார்பாக தலைவர் இ.ஜெயராஜா, பொருளாளர் சிவக்குமரன், செயலாளர் இஜனக்குமார் ஆகியோர் அடங்கிய குழுவினரால் வைத்தியசாலை அபிவிருத்திசபை உறுப்பினர்களான சுந்தரலிங்கம், தங்கராசா ஆகியோர் முன்நிலையில் மேற்படி மருத்துவமனை நிர்வாக உத்தியோகத்தரிடம் பொருட்கள் கையளிக்கப்பட்டது.

கையளிக்கப்பட்ட பொருட்களில் சத்திரசிகிச்சை கூடத்திற்குத் தேவையான துணிவகைகள், சமையல் பாத்திரங்கள், சிகிச்சைக்கு பயன்படுத்தும் ஆயுதங்கள், நீரிழிவு நோயை பரிசோதிக்கும் இயந்திரங்கள் என்பன அடங்குகின்றன.

வணிகா கழகத்தினரால் நீரழிவு நோயைப் பரிசோதிக்கும் இயந்திரங்கள் கையளிக்கப்பட்டதனால் ஒரேநேரத்தில் பலரை பரிசோதிக்கக்கூடிய வசதிகள் ஏற்பட்டுள்ளதாக நிர்வாக உத்தியோகத்தர் தெரிவித்தார்.

(க-101)

# 'சுனாமி' உலகை இணைத்து விட்டது

### -அரசியல் ஆய்வாளர் குமார் ரூபசிங்க

சுனாமி கடற்கொந்தளிப்பு வடக்கு -கிழக்கு மக்களுக்கே பேரழிவை ஏற்படுத்தி விட்டது. வடக்கு -கிழக்கு மக்கள் இருபது வருடகால யுத்தத்தில் ஏற்கனவே பேரழிவை எதிர்நோககியவர்கள். இந்நிலையில் வடக்கு கிழக்கு பிரதேசம் மீளவும் கட்டியெழுப்பப்படவேண்டியது காலத்தின் கட்டாயமாகும் என்று ஜோசப் பரராஜசிங்கம் எம்.பி தெரிவித்தார்.

தமிழர் புனர்வாழ்வு கழகத்தின் ஏற்பாட்டில் சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டோருக்கு நம்பிக்கையூட்டுவோம் என்ற தொனிப்பொருளில் வெள்ளவத்தை இராமகிருஷ்ணமிஷன் பிரதான மண்டபத்தில் இடம் பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே ஜோசப் எம்.பி இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

பேதங்களும் வேறுபாடுகளும் அர்த்தமற்றவையாகும். சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி செய்ய அனைத்து தரப்பினரும் அரசியல் சமய வேறுபாடுகளை மறந்து இணைந்து செயற்பட வேண்டும். சுனாமி அனர்த்தத்தில் உயிரிழந்தவர்களுக்காக பிரார்த்தனை செய்கின்ற அதேவேளை, இவ்வனர்த்தத்தில் தப்பிப் பிழைத்தவர்களுக்கு வாழமுடியும் என்ற நம்பிக்கையை நாம் ஊட்டவேண்டும் என்றார்.

அரசியல் ஆய்வாளர் குமார் ரூபசிங்க அங்கு பேசுகையில்,

சுனாமி அனர்த்தம் உலகை இணைத்து விட்டது. மனிதாபிமானத்தை வளர்த்துள்ளது. மக்களுககு இடையில் எவ்வித பேதமும் இல்லை என்ற உண்மையை நிலைநாட்டி விட்டது. சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டோரின் அத்தியாவசிய அடிப்படைத் தேவைகள் நிச்சயம் பூர்த்தி செய்யப்படவேண்டும்.

ஜனாதிபதி, அரசாங்கம், புலிகள், எதிர்க்கட்சியினர், சமுதாயம், உள்நாட்டு, வெளிநாட்டு அரச சார்பற்ற அமைப்புகள் இவ்விடயத்தில் ஒன்றுபட்டு செயற்படவேண்டும்.

புலிகள் தொடர்ந்தும் மனிதாபிமானப் பணியில் ஈடுபட வேண்டும். எதிர்க்கட்சியினர் பேதங்களை மறந்து அரசாங்கத்துடன் இணைந்து செயற்படவேண்டும் என்றார்.

வண.மாதங்காம அஷீஜி தேரர் அங்கு பேசுகையில்,

சுனாமி எமக்கோர் பாடத்தை கற்பித்துவிட்டது. சாதி, இன, மத பேதங்கள் இதற்குச் கிடையவே கிடையாது. எல்லோரும் மனிதர்களே புதிய உலகம் ஒன்று படைப்போம. புதிய வாழ்வு ஒன்றை உருவாக்குவோம் என்றார். (ற)

# பொய் வதந்திகளை கேட்டு மக்கள் அஞ்சத்தேவையில்லை

(கொழும்பு)

சுனாமிப் பேரலை தொடர்பாக பொய்யான தகவலை பரப்புவோருக்கு கடுமையான தண்டனை வழங்கப்படுமென பொலிஸ்மா அதிபர் சநதிரா பொனாண்டோ எச்சரிக்கை விடுத்துள்ளார்.

நேற்று வடக்கு கிழக்கு மற்றும தென்பகுதியில் சுனாமிப் பேரலை ஏற்பட்டதாக வதந்தி பரப்பப்பட்டது. இதன் காரணமாக மக்கள் மத்தியில் பெரும் பதற்றம் ஏற்பட்டது.

இந்த நிலையில் இதுதொடர்பில தமது கருத்தை வெளியிட்டுள்ள பொலிஸ்மா அதிபர் சந்திரா பொனாணடோ,

சுனாமிப் பேரலை ஏற்பட்டது என்று கூறப்பட்ட செய்திகள் பொயயானவை. அவ்வாறு எவ்வித அனர்த்தங்களும் நேற்று ஏற்படவில்லை.

இந்த நிலையில் இது தொடர்பாக வதந்திகளை பரப்புவோருக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப் படும் என்று கூறினார்.

இவ்வாறு பொய் வதந்திகளைப் பரப்புவோரை கைது செய்து பிணை வழங்கப்படாத அளவிற்கு செய்வதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்று அவர் மேலும் தெரிவித்தார். (க-9)

# சுனாமியால் பலியான அரச ஊழியர்களின் குடும்பத்தினருக்கு மாதாந்த சம்பளம்

### அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானம்

சுனாமியினால் அரசாங்க ஊழியர் ஒருவர் மரணமடைந்திருந்தால் அவர் சேவை செய்யக்கூடிய 55 வயதை அடையும் வரையுமான காலப் பகுதிககுரிய மாதாந்த சம்பளம், அவரில் தங்கி வாழ்ந்த குடும்பத்தாருக்கு வழங்குவது என்றும் அதனைத் தொடர்ந்து குறித்த காலம்வரை ஓய்வூதியம் வழங்குவது எனவும் அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி தலைமையில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற வாராந்த அமைச்சரவைக் கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.


சுனாமியால் மரணமடைந்த அரச ஊழியர்களின் நன்மை கருதி அவர்களது சம்பளத்தை அவர்களின் குடும்பத்தாருக்கு வழங்க வேண்டும என பொது நிர்வாக அமைசசா அமர சிறி தொடங்கொட அமைச்சரவைக்கு செய்த சிபாரிசை அமைச்சரவை ஏற்றுக்கொண்டு மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டதாகத் தெரிய வருகிறது.

கடந்த வருட வரவு -செலவுத்திட்டத்தின் மூலம் அரசாங்க ஊழியர்களுக்கு வழங்குவதாக உறுதியளிக்கப்பட்ட சம்பள உயர்வு உட்பட வருடாந்த சம்பள அதிகரிப்பு ஆகியவையும் வழங்கப்படவுள்ளது. சுனாமியால் சுமார் ஆயிரம் அரசாங்க ஊழியர்கள் மரணித்திருக்கலாம் எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக பொது நிர்வாக அமைச்சு விபரங்களைத் திரட்டி வருகிறது. இதுவரை சுமார் 300 அரச ஊழியர்களின் விபரங்கள் கிடைக்கப் பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

# யாழ்.உ.தொ.நு.கல்லூரி மாணவர்கள் இரத்ததானம்





யாழ்ப்பாணம் உயர் தொழில்நுட்பக்கல்லூரி மாணவர்கள் நேற்று இரத்ததானம் செய்தனர்.

யாழ்ப்பாணம் உயர் தொழில்நுட்பக் கல்லூரியில் கல்வி கற்கும் மாணவர்கள் 60பேர் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு இரத்ததானம் செய்தனர்.

பலாலி வீதியில் அமைந்திருக்கும் கல்லூரி வளாகத்தில் நேற்றுக் காலை இவ் இரத்ததானம் நிகழ்வு நடைபெற்றது. *(படங்கள்:சிவசங்கர்)*

# ஐயங்கள் ஆயிரம்

## இலையுதிர்காலம்

இலையுதிர்காலங்களில் தாவரங்கள் எவ்வாறு உணவைத் தயாரிக்கின்றன?

எல்லா இலைகளையும் உதிர்த்துவிட்டு மொட்டையாக நிற்கும் மரங்களால் ஒளிச் சேர்க்கை செய்யமுடியாது.

தாவரங்களுக்குப் பசி ஏற்படுவதில்லை. வேளா வேளைக்குச் சாப்பிட்டாக வேண்டும் என்ற அவசியமில்லை. வளருவதற்கு என்று ஒரு காலம் வரும்போது வளருகின்றன. பாதகமான காலம் ஏற்படும்போது, எல்லாச் செயல்களையும் நிறுத்திக்கொண்டு ஓய்ந்து விடுகின்றன.

மறுபடியும், மழையும், வெதுவெதுப்பும் கிடைத்தவுடன் புது இலைகளைத் துளிர்த்துப் புத்துணர்ச்சி அடைகின்றன. இலை இல்லாத உதிர்காலத்தில் மரங்கள் அடிப்படை செயல்களை மட்டும் வைத்துக்கொண்டு, வேர்கள் மூலம் ஈரத்தைப் பெற்று உயிரபிடித்துக் கொள்கின்றன.

இலைகளே இல்லாததால் 80 சதவீதம் வேலை நிறுத்தமும் 50 சதவீத சுவாச நிறுத்தமும் ஏற்படுகிறது. இலை உதிர்க்காவிட்டால் கடுமையான வெயிலால், ஈரம் இழந்து மொத்த மரத்திற்கே பாதிப்பு ஏற்பட்டுவிடும்.

இதில் இலை •உதிர்ப்பே சிறந்தது அல்லவா?

## குளிர்சாதனத்தில் உணவு கெடாது!

குளிர்சாதனப் பெட்டியில் வைக்கப்படும் உணவுவகைகள் சிலகாலம் வரை கெடாமலிருப்பது எப்படி?

உணவுகள் கெட்டுவிட்டன என்று கருதுவது அவற்றின் மது பக்டீரியா மற்றும் கிருமிகள் உண்டாகி உணவுப்பொருட்களில் நாம் விரும்பும் சுவை, நிறம், மணம் வித்தியாசப்படுவது ஆகும்.

இவவாறு உணவுப்பொருட்களல் தோன்றும் கிருமிகள் அந்த உணவுகளிலுள்ள போசணைகளை உறிஞ்சி உயிர்வாழ்கின்றன. அதாவது உணவுகள் கெடவேண்டுமாயின் கிருமிகளின் உடலில் மாற்றங்கள் ஏற்படவேண்டும்.

உணவுகள் குளிரூட்டிகளில் வைக்கப்படும்போது அவற்றின் உஷ்ணம் ஐஸ் உறையும் உஷ்ணத்தைவிட மிகவும குறைவடைகின்றது.

இதனால் உணவிலுள்ள நர்த்தன்மை. முழுவதும் ஐஸ்கட்டியாக மாறிவிடுகின்றது. பக்டீரியாவும் திரவவடிவில் இருக்கும் நரும் இவ்வாறு கெட்டியாகிவிடுகின்றது.

இதனால் உயிரியல் இரசாயன எதிர் விளைவுகள் ஏற்படக்கூடிய சூழல் இல்லாமல் போகினறது. அவை செயலிழந்து விடுகின்றன. அதாவது உணவுப்பொருட்கள் கெட்டுப்போவது நிறுத்தப்படுகின்றது.

## பாட்டுப் பாடும்




அதி புத்திசாலிக் குரங்குகள் என்றால், சிம்பன்ஸிகளைச் சொல்லலாம். இவ்வகை குரங்குகளைத் தொடர்ந்து ஆராய்ச்சி செய்து பார்த்தபோது குரங்குகளுக்குச் சங்கீத ஞானம் இருப்பது தெரியவந்துள்ளது.



ஆம்! சிம்பன்ஸி குரங்குகளுக்குப் பொப் சங்கீதத்தைவிட ஜாஸ் பிடித்திருக்கிறதாம். குரங்குகள் பற்றிய வீடியோப் படங்களையும் பார்க்கும் இவைகள் தம் பாஷையில் பாட்டும் “ பாடுகின்றனவாம்!

☼அழகான குரங்குகள் என்று மார்மோஸெட வகையைச் சொல்லலாம். மனிதனும் பொறாமைப்படும் அளவுக்கு ஏகப்பட்ட அழகு இதற்கு. எப்போதும் கூடடமாகப பேசிக்கொண்டிருக்கும். இவற்றுக்கு நீண்ட கூந்தல்தான் ப்ளஸ் பொயிண்ட். இவற்றுக்கு நேர் எதிரிடையான அதாவது அழகற்ற குரங்கு என்றால் அவை ‘ப்ரோ பொலிஸ்’ குரங்குகள்தான.


☼தென்னாபிரிக்காவில் வாழும் ‘டவ்ரகாலி’ என்ற ஆந்தைக் குரங்கு விசித்திரமானது. பகலில் தூங்கிவிட்டு இரவில் ஊர்சுற்றும். இவறறின் முகம் ஆந்தையைப போல காணப் படுவதால் ஆந்தைக் குரங்கு என்கிறார்கள்.

☼மடகாஸ்கர் எனும் தீவில் உள்ள ‘இன்டிரிஸ்’ வகைக் குரங்குகள் மனிதனைபபோல் சூரிய நமஸ்காரம் செய்யும் பழக்கம் கொண்டவையாம!

## மருத்துவக் குறிப்புகள்

- சிறிதளவு ஓமத்தை எடுத்து, ஒரு துணி அல்லது கைக்குட்டையில் முடிந்து, மூக்கால் அடிக்கடி உறிஞ்சிக்கொண்டால் மூக் கொழுக்கு, தலைப்பாரம், ஜலதோஷம் தீரும்.
- இருமல், சளி, தொண்டைக்கோளாறுகளுக்கு பாலில் சிறிதளவு இஞ்சி, ஏலம், ஓமம் அரைத்துக் கலந்து சாப்பிடலாம்.
- ஒலிவ் எண்ணெய் அல்லது தேங்காய் எண்ணெயை கைவிரல் மற்றும் கால் பாதங்களில் தேய்த்து வர, குளிரால் ஏற்படும் விறைப்பு மாறும்.
- இஞ்சி அல்லது சுக்கு இவற்றை உணவில் சேர்த்துககொண்டால் உடலில் வெப்பம்கூடும்.
- உணவில் வெங்காயம், பூண்டு இவைகளை அதிகமாகச் சேர்த்தால் நோய் எதிர்ப்புச் சகதி கூடும்.
- வேப்பெண்ணெயுடன் ஆமணக்கு எண்ணெய் கலந்து, கால்கள் மற்றும் மூட்டுகளில் தேய்க்க மூட்டுவலி குணமாகும்.
- குளிரால் ஏற்படும் காய்ச்சலைக் குணப்படுத்த மணத்தக்காளி ரசம் சாப்பிடலாம்.
- குளிர்காலத்தில் இருமல், சளி, மூச்சுத் திணறல் போன்றவற்றைக் குணப்படுத்த தூதுவளை ரசம் சாப்பிடலாம்.

## குறுக்கெழுத்துப் போட்டி இல-45




அனுப்ப் வேண்டிய முகவரி-

குறுக்கெழுத்துப போடடி இல - 45
‘வலம்புரி - சங்குநாதம்’
இல:- 15, வெள்ளாந்தெரு,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

முழுப் பெயர் :- ..............................

முகவரி :- ..............................

..............................

..............................

இங்கே வெட்டுக ------------------------------

*மேலுள்ள கூப்பனில் விடைகளை நிரப்பி எதிர்வரும் 03ஆம் த்கதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கவும்.*

### இடமிருந்து வலம்

(1)இது சூழலுக்கேற்றவாறு தன்னுடல் நிறத்தை மாற்றிக்கொள்ளும். (5)மொழிகளுள் ஒன்று. (6)பறவைகள் இது தேடி அலையும். (7)பொழில் - இதனை இப்படியுமழைப்பர். (9)முகம் - இதனைக் குறிக்கும். (10)ஞாலம் என்றும் கூறுவர். (11)சமாதானத்தின் சின்னம்.

### மேலிருந்து கீழ்

(1)பறவை - இதனை இப்படியுமழைப்பர். (2)தென்காற்று - இதனைக் குறிக்கும். (3)உறுதி - இதனை இப்படியும கூறலாம. (4)மருத்துவக் குணமுடைய கீரை. (6)கரும்பொன் - இதனைக் குறிக்கும். (7)பெருஞ்சீரகம் - இப்படியுமழைப்பர். (8)தாள் - இதனைக் குறிக்கும்.

### குறுக்கெழுத்துப் போட்டி இல. 43இன் விடைகள்

**இடமிருந்து வலம்**

1.இராவணன் 5.காலம் 6.திம்பு 7.புடவை 8.ஜதி 12.சுபமங்களம்

**மேலிருந்து கீழ்**

1.இதிகாசம் 2.வலம்புரி 3.வைதகன் 4.பாம்பு 9.ஜலம் 10.பசு 11.கவி

### பரிசு பெற்றோர் பெயர் விபரம்

**முதற் பரிசு** :- சொ.நித்தியா, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

**இரண்டாம் பரிசு** :- தி.சதானந்தன், கோண்டாவில் வடக்கு, கோண்டாவில்.

**மூன்றாம் பரிசு** :- K. இராஜகோபால், ‘பொன்மனை’, தொல்புரம்.

### போடடியில் கலந்துகொண்டு பாராட்டுப்பெறும் அதி'ஷடசாலிகள'ன் பெயர் வபரம்

சி.சங்கவை, சுனனாகம். க.குகதயாழினி, வட்டுககோடடை. P.S.ராணி, சங்கானை. வி.இளங்கோ, கோப்பாய. கே.அரசேஸ்வரன், நல்லூர். T.S.சயந்தன், வட்டுக்கோட்டை. K.கனகசபாபதி, தம்பசிட்டி. வே.குமாரசுவாமி, கரவெட்டி. என்.ஜே.இரத்தினதயா, ஏழாலை. L.அபிராமி, வல்வெட்டி. ம.சர்மினி, கோண்டாவில். அ.அனித்தா, சித்தன்கேணி. யோ.ஜெகதீஸ்வரி, சாவகசசேரி. வ.மன்னா அன்ரனி, யாழ்ப்பாணம். லோ.சுவஸ்திகா, யாழ்ப்பாணம். S.விதுஷன், வண்ணார்பண்ணை.

# தந்தை செல்வாவின் வாழ்க்கை வரலாற்றை சித்தரிக்கும் நூல்

ஓர் அரசியல் தலைவனின் வரலாறு அவன் சார்ந்த இனத்தின் வரலாறாக அமைகிறது. தென்னா




**நூல்:- ஒப்பற்ற தலைவர் தந்தை செல்வா**
**தொகுப்பாசிரியர்கள்:- வெ.செ.குணரத்தினம் ஐ.தி.சம்பந்தன்**

பிரிக்க விடுதலைக்காக பன்னெடுங்காலம் பலதியாகங்களைச் செய்த நெல்சன் மண்டேலாவின் வரலாறு தென்னாபிரிக்க சுதந்திரத்தின் வரலாறாக அமைகிறது. அதேபோல, ஈழத் தமிழர்களின் அரசியல் வரலாற்றில் அனைத்து மக்களாலும் ஏற்றுக் கொள்ளப்படக்கூடிய ஒப்பற்ற தலைவராக விளங்கியவர் மூதறிஞர் செல்வா. அவருடைய வரலாறு காலத்தால் அழியாத முறையில் சரித்திரச் சான்றுகளுடன் எழுதப்பட வேண்டுமென்ற பேரவாவின் விளைவுதான் இந்நூல்.

'மூன்றெழுத்திலே என் மூச்சிருக்கும்' ஒரு கவிஞன் கூறியதற்கிணங்க 'செல்வா' என்ற மூன்றெழுத்து தமிழ் மக்களின் மூச்சோடு கலந்த தமிழர் வாழ்விலே மாபெரும் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கையின் அரசியல் வரலாற்றிலே காலத்துக்குக் காலம் பல தமிழ்த் தலைவர்கள் தோன்றியுள்ள போதிலும் அவர்களில் எவராவது தமிழர் நல்வாழ்வுக்கென ஒரு அரசியல் திட்டத்தைக் கூறியது கிடையாது. 'சமஷ்டி' அரசியல் அமைப்புத்தான் தமிழ்ப் பிரதேசங்களில் மாத்திரமன்றி இலங்கை முழுவதிலும் தமிழர் தன்மானத்துடன் தலை நிமிர்ந்து வாழ வைக்கும் அருமருந்து மாத்திரமல்ல; சரியானதும் முடிவானதுமான மருந்து என்று திட்டவட்டமாக எடுத்துரைத்தவர் செல்வா ஒருவர் தான். அன்று அவர் கூறிய கருத்தை ஏற்றுக் கொள்ள மறுத்து எள்ளி நகையாடியவர்கள் இன்று ஒருமித்த குரலில் சமஷ்டி தான் தீர்க்கமான தீர்வு என்பதை ஏற்றுக் கொண்டுள்ளதைக் காணும் போது செல்வாவின் தீர்க்க தரிசனத்தைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

## திறனாய்வுக்களம்

மெல்லிய உருவம். மிருதுவான குரல். ஆனால் அந்தக் குரல் இலங்கை பேரினவாத அரசையே கிடுகிடுக்கச் செய்தது. சிங்கள பேரினவாதத்துக்கு எதிராகக் குரல கொடுத்த போதிலும் செல்வாவை சிங்கள மக்கள் அனைவரும் அவரது நேர்மை, கண்ணியம், பண்பாடு முதலிய நற்குணங்களுக்காகப் பெரிதும் மதித்தனர்.

இந் நூலின் தொகுப்பாசிரியர்கள் இருவரும் தந்தை செல்வாவுடன் பல காலம் பழகியவர்கள். அப்பழக்கத்தால் ஏற்பட்ட பல அனுபவங்களை இனிய தமிழில் வழங்கியுள்ளார்கள்.

இன்றைய இளம் சந்ததியினர் பலருக்கு இவரைப் பற்றியோ இவரது அரசியல் போராட்டங்கள் பற்றியோ. அதிகம் தெரியாத நிலையில், இந்நூல் அவருக்கொரு வழிகாட்டியாக அமையும் என்பதில் சந்தேகமில்லை. □

**நல்லை மன்னன்**

# தடகள விளையாட்டுப் போட்டிகள் வடக்கு-கிழக்கிலும் நடைபெறும்

## மாகாண உதவிப் பணிப்பாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இவ்வருடம் நடத்தி முடிக்கப்பட வேண்டிய தடகள விளையாட்டுப் போட்டிகள் யாவும் அட்டவணையின்படி நடைபெறும் என வடக்கு- கிழக்கு மாகாண விளையாட்டு உதவிப் பணிப்பாளர் கே.டபிள்யூ.விமலராஜன் தெரிவித்துள்ளார்.

இது சம்பந்தமாகக் கடந்த 17 ஆம் திகதி திருகோணமலையில் விளையாட்டு அமைச்சின் செயலாளரின தலைமையில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்திலேயே இந்த முடிவு எடுக்கப்படுள்ளது.

வடக்கு-கிழக்குப் பகுதிகளில் 25 பிரதேச செயலர் பிரிவுகள் சுனாமியால் பாதிப்படைந்து இருப்பதால் மாவட்டமட்ட, பிரதேச செயலாளர் பிரிவு விளையாட்டுப் போட்டிகள் நடத்த முடியாது என மேற்படி கூட்டத்தில் பலர் கருத்துத் தெரிவித்திருந்த போதும், போட்டியாளர்களின் நன்மை கருதியும், தேசிய மட்டத்துக்கு வீரர்கள் செல்லமுடியாது போனால் அவர்களுக்குரிய பரிசுகள், சான்றிதழ்கள் என்பன இழக்கவேண்டியேற்படும் என்பதனால் இப்போட்டிகள் நடத்தப்படவேண்டும் என உதவிப் பணிப்பாளர் தெரிவித்திருந்தார். இதனையடுத்து இம் முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி, எதிர்வரும் மார்ச் மாத முடிவுக்குள் உதவி அரச அதிபர் பிரிவுக்குட்பட்ட பிரிவுகளிலும், ஜூன மாத முடிவுக்குள் மாவட்ட மட்டத்திலும் ஓகஸ்ட் மாத முடிவுக்குள் மாகாணமட்டத்திலும், ஒக்டோபர் மாத முடிவுக்குள் தேசிய மட்டத்திலும் தடகள விளையாட்டுப் போட்டிகளை நடத்தி முடிப்பதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ற-5)

# அல்வாயில் வெளிவந்த அதிசய நீர்பற்றி பகுப்பாய்வு செய்வதற்கு நடவடிக்கை

## நீரூற்று கிளம்பிய இடத்தில் கேணி அமைக்கவும் திட்டம்

அல்வாய் முத்துமாரி அம்மன் ஆலயத்தில் மணிக் கோபுரத்திற்கு அத்திபாரம் வெட்டியபோது தோன்றிய அதிசய நீர் பகுப்பாய்வுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

அல்வாய் முத்துமாரி அம்மன் ஆலயத்தில் 51 அடி உயரத்தில் மணிக் கோபுரம் கடடவென அத்திவாரத் தளம் வெட்டியபோது உருவான தண்ணீர் ஊற்றினால் அப் பகுதியில் பெரும் பரபரப்பு உருவானது.

இருப்பினும் கட்டிட ஒப்பந்தக்காரர்களால் மேலும் வெட்டிய போது அதிக அளவில் நீர் வந்ததினால் அவ்வேலை இடை நிறுத்தப்பட்டு ஆலய நிர்வாகத்து டன் கலந்தாலோசிக்கப்பட்டது.

இந்நிலையில் அந்நீரூற்றை அபிஷேகக் கேணிக்கிணறாக அமைக்கலாம் எனவும் பரிபாலன சபை உறுப்பினர்கள் தெரிவித்ததை அடுத்து நாளை ஞாயிற்றுக் கிழமை நிர்வாக சபை உறுப்பினர்களுடன் கலந்துரையாட ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இதேநேரம் அங்கு ஊற்றெடுத்து வரும் நீரின் தன்மைபற்றி அறிவதற்காக நீர்வளசபையினர் அந்நீரை பகுப்பாய்வுக்கு எடுத்துச் சென்றுள்ளனர்.

இது பற்றி ஆலய பரிபாலன சபைத் தலைவர்சி.கணேசமூர்த்தி கருத்துத் தெரிவிக்கையிலேயே இந்நீரூற்று பற்றி எதுவும் கூற முடியாதுள்ளதாகவும் முன்பு 100 வருடங்களுக்கு முன்னர் அப்பகுதியில் கேணி இருந்ததற்கான தடயங்கள சில தென்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

அத்துடன் சகல உறுப்பினருடனும் கலந்தாலோசித்த பின்னர் அவ்வூற்றை கேணிக்கிணறாக கட்டிவிடலாம் என எண்ணியுள்ளதாகவும் குறித்த மணிக்கோபுரத்தை மறுபக்கத்தில் அமைக்கலாம் எனவும் குறிப்பிட்டார்.

இம் மணிக்கோபுரத்திற்கான மணி லண்டனிலிருந்து கொண்டு வரப்படவுள்ளதாகவும் சுமார் 51 அடி உயரத்தில் கோபுரம் அமைக்க திட்டம் தீட்டியுளளதாகவும் கூறினார்.(ப-101)

# நிவாரணம் பெறுவதற்காக பொய்யான பதிவுகளாம்

(கொழும்பு)

சுனாமி- அனர்த்தத்தால் பாதிக்கப்படாத பலர் போலியான ஆவணங்களை சமர்ப்பித்துப் பதிவுகளை மேற்கொண்டு நிவாரணங்களைப் பெற்றுக் கொள்வது தெரியவந்துள்ளதாக அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

இவ்வாறானவர்களுக்கு எதிராகவும், இவர்களுக்கு உடந்தையாகச் செயற்படும் சில கிராம உத்தியோகத்தர் உட்பட்ட அதிகாரிகளுக்கு எதிராகவும் கடும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இது தொடர்பான முறைப்பாடுகள் மாவட்ட அரசாங்க அதிபர்களுக்கும், இரகசியப் பொலிஸாருக்கும் கிடைத்த வண்ணமுள்ளன. இவ்வாறானவர்களின் விபரங்கள் தற்போது பெறப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார். (ற-9)

# செய்தித் துளிகள்

## செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சிப் பாடசாலைகளில் சாதாரணதர வகுப்பு மாணவர்களுக்கு தொழில் நுட்பத்திறன் பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு இன்று சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இதில் சம்பந்தப்பட்ட ஆசிரியர்களைத் தவறாது கலந்து கொள்ளும்படி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா கேட்டுள்ளார். (ப-29)

## பயிற்சி ஆரம்பம்

(பொன்னாலை)

யாழ். உயர் தொழில் நுட்ப நிறுவனத்தின் இவ் வருடத்திற்கான பகுதிநேரப் பயிற்சி நெறிகள் இன்று சனிக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

இதேநேரம் பகல் நேரப் பயிற்சி நெறிகள் கடந்த செவ்வாய்க் கிழமை முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ப-49)

## அன்பளிப்பு

(பொன்னாலை)

வரணி மகாவித்தியாலயத்திற்கு புதிய பெயர் வளைவு ஒன்றும் புதிய கேற் ஒன்றும் பொருத்தப்பட்டிருக்கின்றது.

இவ்விரண்டும் சுமார் 80 ஆயிரம் ரூபா செலவில் பொருத்தப்பட்டிருக்கின்றது.

இவற்றை இப்பாடசாலையின் பழைய மாணவரும் - லண்டனில் வசித்து வருபவருமாகிய வரணி இயற்றாலைப் பகுதியைச் சேர்ந்த சின்னப்பு உதயகுலம் என்பவரே அன்பளிப்புச் செய்துள்ளார். (ப-49)

## விண்ணப்பிக்கலாம்

(யாழ்ப்பாணம்)

யூனியன் கல்லூரியின் முறைசாராக் கல்விப்பிரிவில், அடுத்த மாதம் 2 ஆம் திகதி தொடக்கம் கணனிப் பயிற்சி நடைபெறவுள்ளது.

இப் பயிற்சியில் பாடசாலையை விட்டு விலகிய மாணவர்கள் உள்வாங்கப்படவுள்ளனர்.

இதற்கான விண்ணப்பங்களை வரும் முதலாம் திகதிக்கு முன் சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ப)

## பயிற்சி நெறி

(பொன்னாலை)

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் அனுசரணையுடன் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த பெண்களுக்கான தொழிற் பயிற்சி நெறி ஆரம்பமாகவுள்ளது.

யாழ்ப்பாணம், வடமராட்சி, தென்மராட்சி, தீவகம், வலிகாமம் என ஐந்து பிரிவுக்களில் இப் பயிற்சி நெறி நடத்தப்படவிருக்கிறது.

மாவட்டத் தொழில்த்துறைத் திணைக்களத்துடன் இணைந்து இப்பயிற்சி நெறி வழங்கப்படவிருக்கின்றது.

இப் பயிற்சி நெறிக்கான பணம் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான வரவு-செலவுத்திட்ட ஒதுக்கீட்டிலிருந்து பெறப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ப-49)

## நடவடிக்கை

(மருதங்கேணி)

சுனாமி கடல் பேரலையினால் சேதமடைந்த மீன்பிடிப்படகுகளைத் திருத்த நடவடிக்கைகளை தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் எம்.எம்.என்.நிறுவனம் வடமராட்சி கிழக்கு பகுதியில் ஆரம்பித்துள்ளது.

கடந்த மூன்று நாட்களாக இவ் நடவடிக்கைகள் நடைபெற்று வருகிறது. (ப-35)

## அழிக்கப்பட்டன

(பொலிகண்டி)

டெனிஸ் கண்ணிவெடியகற்றும் பிரிவினரால் குப்பிளான், ஏழாலை, மல்லாகம் போன்ற பிரதேசங்களில் மீட்கப்பட்ட 5 மோட்டார் செல்களும் 185 கண்ணிவெடிகளும் குப்பிளானில் அமைந்துள்ள ஆயுத அழிப்பு குழியில் வைத்து வெடிக்கவைக்கப்பட்டன. (ப-106)

## நியமனம்

(பொன்னாலை)

சாவகசசேரி வைத்தியசாலைக்கு சேவையில் ஈடுபடுவதற்காக இரு பட்டதாரி பயிலுநர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

சுகாதாரத் திணைக்களத்திற்கு நிர்வாக சேவைக்கான பயிலுநர்களாக நியமிக்கப்பட்ட இந்த இருவரும் கடந்த 22 ஆம் திகதி முதல் சாவகச்சேரி வைத்தியசாலையில் நியமிக்கப்பட்டுள்ளனர். (ப-49)

★ ★ ★

(துன்னாலை)

வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச சபைக்கு கடந்த 5 ஆம் திகதி முதல் யாழ்மாநகர சபை செயலாளராக கடமைபுரிந்த வே.குலநாயகம் நியமிக்கப்பட்டுள்ளார்.

முனனர் பிரதேச சபை செயலாளராக கடமைபுரிந்த ஜோசப் ஓய்வு பெற்றுச் சென்றதையடுத்தே இவரது நியமனம் வழங்கப்பட்டுள்ளது. (க-10)

## அழிப்பு

டெனிஸ் கண்ணிவெடியகற்றும் பிரிவினரால் மீட்க முடியாத நிலையில் நிலத்தில் புதையுண்ட வெடி பொருட்கள் அழிக்கப்பட்டுள்ளன.

குப்பிளான் பகுதியில் 81 மில்லி மீற்றர் மோட்டார் செல் ஒன்றும் 60 மில்லி மீற்றர் செல் ஒன்றும் மல்லாகப் பகுதியில் கைக்குண்டு ஒன்றும் இவ்வாறு வெடிக்கவைக்கப்பட்டன. (ப-106)

## மணவாளக் கோல விழா

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் கருணாகரப் பிள்ளையார் கோயில் மணவாளக் கோல விழா எதிர்வரும் முதலாம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

அன்று முற்பகல் 9.30 மணிக்குச் சங்காபிஷேகக் கிரியைகளும் நண்பகல் மாகேசுர பூசையும் இடம்பெறவுள்ளது.

இதனைத் தொடர்ந்து மாலை 5.00 மணிக்கு விசேட பூசையும், சமயப் பிரசாரகர் இணுவையூர் கெ.தவராசாவின் 'திருமுறைகளும் நாமும்' எனும் பொருளில் உபந்நியாசமும் இடம்பெறவுள்ளது.

இதனைத் தொடர்ந்து இன்னிசை விருந்தும் இரவு 8.00 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் திருவூஞ்சல் நிகழ்வும் இடம் பெறும்.(க-9)

## மிதிவெடி அகற்றல்

(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறை கணக்கர் ...திப பகுதிகளில் உள்ள வெற்றுக் காணிகளில் மிதிவெடிகள் அகற்றும் ...குதிகளில் ஹலோரெஸ் நிறுவனத்தினர் ஈடுபட்டுள்ளனர்.

கனரக வாகனங்களின் மூலம் வெடி பொருட்கள் மீட்கும் பணிகள் நடைபெறுகிறது. (ப-51)

## மீட்பு

டெனிஸ் கண்ணிவெடியகற்றும் பிரிவினரால் மூன்று மாத காலத்தில் மேற்கொள்ளப்பட்ட பணிகள் மூலம புன்னாலைக்கட்டுவன் வடக்குச் சந்தியில் இருந்து குப்பிளான் சந்திவரையிலான பகுதியில் இருநது இரு 81 மில்லி மீற்றர் மோட்டார் செல்களும் 1330 கண்ணி வெடிகளும் மீட்கப்பட்டன. (ப-106)

## நன்னீர் உவர் நீரானது

சுனாமி பேரலையின் தாக்கத்தின் பின் பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தியாலயத்தில் உள்ள நன்னீர் கிணறு உவர் நீராக மாறியுள்ளது.

சுனாமிப் பேரலை இப்பாடசாலை மீது தாக்கத்தை ஏற்படுத்தாத போதும் கிணற்று நீர் உவர் நீராக மாறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ப-104)

## திருவிழா

(பருத்தித்துறை)

பருத்தித்துறை தும்பளை லூர்த்துமாதா கோவில் திருவிழா எதிர்வரும் 2 ஆம் திகதி அன்று ஆரம்பமாகவுள்ளது. (ப-104)

# சிறுவர் அரங்கம்

## விடுகதைகள்

1. உதிர்த்தால் ஓடிடுவான், காற்றடித்தால் பறந்தடுவான, வெயில் பட்டால் உலர்ந்திடுவான் அவன் யார்?

2. இரவல் கிடைக்காதது இரவில் கிடைப்பது அது என்ன?

3.ஓட்டவாயனுக்கு விழுந்த பல் முளைக்கவில்லை அது என்ன?

4. காட்டிலே பச்சை கடையிலே கறுப்பு வீட்டிலே சிவப்பு அது என்ன?

## நெருப்புக்கோழி



பூமியில் வேகமாக ஓடும் இரண்டு கால் பறவை நெருப்புக்கோழி. இது மணிககு 45 முதல் 72 கிலோமீற்றர் வேகததில் ஓடும. 156 கிலோ எடை வரையும், ஏழு முதல் ஒன்பது அடி உயரம் வரையும் இது வளரும்.

இதன் கழுத்து மிக நீளமாக இருக்கும். கால்கள் மிகவும் உறுதியானவை. ஆபிரிக்காவில் இந்தப் பறவைகள் காணப்படுகின்றன. இது நடமாடும் குப்பைக்கூடை. சாப்பிட எதுவும் கிடைக்காவிட்டால் கற்களைக்கூட விழுங்கிவிடும். பல நேரங்களில் இந்தப் பறவை மரணமடைய அந்தக் கற்கள்தான் காரணம். ஆண் பறவைகளின் கால் பாதங்கள் மிகவும் வலுவானவை. இந்தக் கால்களில் அடிபட்டு மனிதர்கள் பலர் மரணம் அடைந்திருக்கின்றனர்.

சொ.நித்தியா, கொக்குவில்.

## விநோத விடைகள்



மிருக ராஜன் தலையில்
ரோமம்
அடர்ந்திருப்பதேனே?-
காட்டில்
வெட்டி விடுவதற்கு எந்த
ஆளும்
இல்லையாதலால்!

ஒட்டகச் சிவிங்கி
கழுத்து மிகவும்
நெட்டையானதேன்? -
அது



எட்டி எட்டி இலையும்
தழையும்
பறித்துத் தின்றதால்!

வரிக்குதிரையின் உடம்பு
முழுதும்
கோடிருப்பதேன்? -
யாரோ
வலிக்க வலிக்க
சவுக்கினாலே
அடித்த காயம் தான்!

அண்டங்காக்கை
அதிகமாகக்
கறுத்துப் போனதேன்?-
அது அடுப்புக்கரியைத்
திருட்டுத் தனமாய்
எடுத்துத் தின்றதால்!

கிளியின் மூக்கு குங்குமம்
போல்
சிவந்திருப்பதேன்?-
யாரோ
கெட்ட பையன் கையைக்
கொத்தி
ரத்தம் பட்டதால்!

ஆந்தை பக்காத் திருடன்
போலே
விழித்துப் பார்ப்பதேன்?
-அது
அரச பார்வை என்று
நினைத்துக்
கொண்டதாலே- தான்!

குழந்தைக் கவிஞர்
அழ. வள்ளியப்பா

## கண்டுபிடியுங்கள்

சிறுவர்களே! இங்குள்ள 5 சட்டைகளும் ஒரேமாதிரியாக உங்களுக்குத் தோன்றலாம். ஆனால் இவற்றில் இரண்டு சட்டைகள் மட்டும் ஒரேமாதிரியானவை. அந்த இரண்டும் எவை
எனக் கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்?




## உலக அதிசயங்கள்

நவீன உலக அதிசயங்கள்

*ஆக்ராவில் உள்ள தாஜ்மஹால்.
*பாரிஸில் உள்ள ஐஃமில் கோபுரம்
*டிஸ்னிலாந்து
*பிக்பென் கடிகாரம்
*அமர்நாத் பனிலிங்கம்
*லிபர்ட்டி சிலை அமெரிக்கா
*சீனாவின் மலர்த் தோட்டம்.

நாம் எல்லோரும் உலகின் பங்குதாரர்கள். உரிமை இருப்பது போலவே கடமையும் நம் எல்லோருக்கும் உண்டு.

விடைகள்
விடுகதைகள்
1.மழை 2. தூக்கம்
3.சீப்பு 4. மரம், கரி, நெருப்பு
கண்டுபிடியுங்கள்
சட்டைகள் 2, 4

## இது யார் பெயர்?

முன்னொரு காலத்தில் வேங்கைபுரி என்ற நாட்டை வேந்தன் என்ற அரசன் ஆண்டு வந்தான். அவர் தமது நாட்டில் இறைவனுக்காக மிகப்பெரிய ஆலயம் ஒன்றை அமைக்க எண்ணினார். இதுவரை எவருமே கட்டியிராத வாறு மிக அழகிய கோயில் கட்டுவதன் மூலம் தமது புகழ் பல்லாண்டுகாலம் புகழுடன் விளங்கும் என்பது அவருடைய விருப்பம்.

இதற்காக நாடெங்கிலுமிருந்து கைதேர்ந்த சிற்பிகளை வரவழைத்தார். கோயில் கட்டுவதற்கான கற்களையும் பாறைகளையும் கொண்டு வரச்செய்தார். சிற்பிகள் வேலையைத் தொடங்கினர். கல்லுளிகளின் ஓசை கேட்கலாயிற்று. கோயில் வேலை துரிதமாக நடைபெற்று வந்தது.

மன்னன் நாள்தோறும் கோயில் வேலையை வந்து பார்வையிடுவார். நாளுக்கு நாள் கோயில் கட்டும் வேலை வளர்ச்சி பெறுவது கண்டு உள்ளம் பூரிப்படைந்தார்.

பல நாட்களுக்குப் பின்னர் ஒரு வழியாகக் கோயில் கட்டி முடிந்தது. அழகிய கோபுரமும் கோபுரத்தில் உள்ள சிற்பங்களும் பார்ப்பவர் உள்ளத்தைப் பரவசமடையச் செய்யும்படியாக விளங்கின. மன்னன் இதனைக் கண்டு பூரிப்படைந்தான். கோயில் பணி பர்த்தியானதும் மிகப் பெரிய சலவைக்கல் ஒன்றில் கோயிலைக் கட்டிய தனது பெயரைப் பொன்னால் பொறிக்கச் சொன்னான். அதனைக் கோபுர வாசற்படியில் எல்லோர் கண்களிலும் படும்படியாகப் பதித்து வைக்கச் சொன்னான்.

அன்று இரவு அரசன் தூங்கிக்கொண்டிருக்கும் போது ஒரு கனவு கண்டான். கனவில் இறைவன் தோன்றினார். மன்னன் கட்டிய கோயிலும் தோன்றியது. அதில் மன்னன் பெயர் பொறிக்கப் பெற்ற சலவைக்கல்லும் இருந்தது. இறைவன், மன்னன் பெயர் பொறிக்கப்பட்டிருந்த சலவைக்கல்லின் அருகே சென்றார். மன்னன் பெயரை அழித்துவிட்டு வேறு யாரோ ஒரு பெண்மணியின் பெயரை எழுதிவிட்டுச் சென்றார். மன்னன் திடுக்கிட்டுக் கண்விழித்தான். எழுந்து நேரே கோயிலுக்குச் சென்றான்.

சலவைக் கல்லைப் பார்த்த அவனுக்குத் தூக்கிவாரிப்போட்டது. ஆம், அவன் பெயர் அழிக்கப்பட்டு யாரோ ஊர் பேர் தெரியாத ஒரு பெண்மணியின் பெயர் அதில் பொறிக்கப்பட்டிருந்தது. இதைக்கண்ட அரசனுக்கு ஒருபுறம் அவமானமாகவும், மறுபுறம் வேதனையாகவும் இருந்தது.

இவ்வளவு பாடுபட்டு பெரும் பொருள் செலவு செய்து இந்தக் கோயிலைக் கட்டினேன். முடிவில் என்னுடைய பெயர் பொறிக்கப் படாமல் வேறு யாரோ ஒரு பெண்மணியின் பெயர் பொறிக்கப்பட்டிருக்கிறதே! என்று வேதனையடைந்தான். காவலர்களை அனுப்பி அந்த சலவைக்கல்லில் பெயர் பொறித்துள்ள பெண்மணியை எங்கிருந்தாலும் தேடி அழைத்து வருமாறு கட்டளையிட்டார்.

காவலர்களும் நகர் புறாவும் சுற்றித் திரிந்து கடைசியில் ஊருக்கு ஒதுக்குப்புறம் உள்ள ஒரு குடிசையில் தன்னந்தனியாக வசித்து வந்த ஒரு மூதாட்டியை அழைத்து வந்தனர். அவள் பெயர்தான் அந்தச் சலவைக்கல்லில் பொறிக்கப்பட்டிருந்து.

அந்த மூதாட்டியைப் பார்த்த அரசன், "அந்தச் சலவைக்கல்லில் பொறிக்கப்பட்டிருக்கும் பெயர் உங்களுடையதுதானா?" என்று கேட்டான்.

கிழவி கண்களை நன்கு துடைத்துக் கொண்டு சலவைக்கல்லைப் பார்த்தாள். பிறகு "ஆம் அரசே அது என்னுடைய பெயர் தான்... தவறுதலாகப் பொறிக்கப்பட்டுவிட்டது போல் இருக்கிறது" என்றாள்.

"இல்லை அம்மா, என் பெயர்தான் முதலில் அந்தச் சலவைக் கல்லில் பொறிக்கப்பட்டது. இறைவனே வந்து என் பெயரை அழித்துவிட்டுத் தங்கள் பெயரை இதில் பொறித்து விட்டுச் சென்றுக்கிறார். அதன் காரணம் என்னவென்று எனக்குத் தெரியவில்லை" என்றா அரசன்.

"நான் இந்தப் பக்கம் வந்தது கூட இல்லை... அப்படியிருக்க இதில் என் பெயர்



ஏன் பொறிக்கப்பட்டிருக்கிறது" என்று வியப்புடன் கேட்டாள் கிழவி.

"தாயே, இந்தக் கோயில் பணியில் நீங்கள் சம்பந்தப்பட்டிருக்க வேண்டும். இல்லாவிட்டால் இறைவன் தங்கள் பெயரை இதில் பொறிததிருக்கமாட்டார். தாங்கள் செய்த தொண்டு என்னவென்று கூறுங்கள்" என்றான் அரசன்.

நெடுநேரம் யோசனை செய்து பார்த்த கிழவி "மன்னா! இந்தக் கோயில் பணிக்காக நான் ஒன்றும் செய்யவில்லை. ஆனால் ஒன்று மட்டும் செய்திருக்கிறேன். இந்தக் கோயில் கட்டுவதற்கான கற்கள், மரங்கள் முதலியவற்றை ஏற்றிவரும் வண்டிகள் நாள்தோறும் என் வீட்டுப் பக்கமாகத்தான் வரும். அந்த சமயத்தில் வண்டியோட்டிகளுக்குத் தாகந்தீரத் தண்ணீர் கொடுப்பேன், மோர் கொடுப்பேன், குதிரைகளுக்குச் சிறிது புற்களைக் கொடுத்து தண்ணீர் காட்டுவேன் அவ்வளவுதான் நான் செய்தது" என்றாள் கிழவி.

"தாயே நான் வெறும் புகழுக்காக இந்தக் கோயிலைக் கட்டினேன். தாங்களோ புகழை விரும்பாமல் தொண்டு செய்தீர்கள். எனவேதான என் பெயரை அழித்துவிட்டு இறைவன் தங்கள் பெயரைப் பொறித்துள்ளார். தன்னலமற்ற தங்கள் தொண்டினை இந்தக் கோயிலில் உள்ள சலவைக்கல் என்றென்றும் எடுத்துக்காட்டும். வாழ்க தங்கள் புகழ்" என்று கூறிய மன்னன் அந்தக் கிழவிக்கு நிறைய பொருள் பரிசாகக் கொடுத்து அனுப்பினார்.

# யூதர்களைப் படுகொலை செய்த

**அவுஸ்விச் மரண முகாம் விடுவிக்கப்பட்டு அறுபது ஆண்டுகள் யூதர்களுக்கு எதிரான போக்கு பற்றிய வரலாற்றுக் கண்ணோட்டம்.**






# அவுஸ்விச் மரணமுகாம் விடுவிக்கப்பட்டு

# 60ஆவது ஆண்டு நினைவு

**போ**லந்து நாட்டின் தென் பகுதியில் இரண்டாம் உலகப்போர் காலத்தில் நாஷிகள் நடத்திய மரணமுகாம் இருந்த அவுஸ்விச்சில் இருந்து உயிர்தப்பிய சுமார் இரண்டாயிரம் பேர், அந்த முகாம் சோவியத் படைகளால் விடுவிக்கப்பட்டு சரியாக அறுபது ஆண்டுகள் நிறைவடையும் நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

அவுஸ்விச் முகாமில் ஹிட்லரின் நாஷிப் படைகளால் திட்டமிட்டுக் கொல்லப்பட்ட பெரும்பாலும் யூதஇன மக்கள் உள்ளிட்ட பத்து லட்சத்துக்கும் மேற்பட்டோருக்கு அஞ்சலி செலுத்துமுகமாக அங்கு முப்பத்தெட்டு நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

பனிபெய்யும் சூழலில், உறையவைக்கும் குளிரில், அந்த அவுஸவிச் முகாமுக்கு மனிதர்களைக் கொண்டுவரும் ரயில் சப்தம் கேடக, அந்த நிகழ்ச்சி தொடங்கிப் பிறகு யூத இசையுடன் நிறைவடைந்தது. அவுஸ்விச்சில் நடந்து வரும் வைபவத்தில் போலந்து, ரஷ்யா, இஸ்ரேல் ஆகிய நாடுகளின் அதிபர்கள் உரையாற்றியுள்ளனர்.

ஜேர்மனியில் நாஷிக்கள் பதவிக்கு வந்த காலகட்டத்தில் நிலவிய யூத எதிர்ப்புச் சூழல் எப்படிப் பட்டதென்று இஸ்ரேலிய அதிபர் இந்த வைபவத்தில் கூடியிருந்தவர்களுக்கு நினைவுபடுத்தினார்.

யூதர்கள் அனுபவித்த பெரும் துயரத்தை மற்ற நாடுகள் கண்டுகொள்ளாமல் இருந்ததையும் அவர் விமர்சித்தார். சாம்பலில் இருந்து உயிர்த்தெழுந்த யூத மக்கள் மீண்டும் ஒரு தாய்நாட்டை ஏற்படுத்தினர் என்று அவர் கூறியுள்ளார்.

அவுஸ்விச் மரணமுகாமைச் சென்றடைந்த ரஷ்யப் படைப்பிரிவைச் சேர்ந்தவர்களுக்கான மன்றத்தின் கூட்டம் முன்னதாக நடைபெற்றுள்ளது. இதில் உரையாற்றிய ரஷ்ய அதிபர் புடின், யூத எதிர்ப்புவாதத்தைக் கண்டும்காணாமல் விடும் உரிமை எவருக்கும் இல்லை என்று கூறியுள்ளார்.

பாசிஸத்தை ஒழிக்கவேண்டும் என்பதற்காக வேறெந்த நாட்டை விடவும் கூடுதலாகப் போராடியிருக்கும் ரஷ்யாவில் யூத எதிர்ப்பு உணர்வுகள் மறுபடியும் தலைதூக்குவது கண்டு வெட்கப்படுவதாக அவர் கூறினார்.

இரண்டாம் உலகப்போர் காலத்து யூத இன ஒழிப்பு சரித்திரத்தை ஒருநாளும் திரிக்கக்கூடாது என்று இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட இஸ்ரேலியப் பிரதமர் தெரிவித்தார்.

பிரான்ஸை ஜேர்மனி ஆக்கிரமித்திருந்தபோது அவுஸ்விச்சுக்கு நாடுகடத்தப்பட்டிருந்த என்பதாயிரம் பிரஞ்சுப் பிரஜைகளை நினைவு கூறும் விதமாக பிரஞ்சு அதிபர் அவுஸ்விச்சில் கொடியேற்றினார். நாடுகடத்தப்பட்டவர்களில் கிட்டத்தட்ட அனைவருமே யூதர்களதான். இவர்களை நாடு கடத்தியதற்கான பொறுப்பை பிரான்ஸ் ஏற்கத்தான் வேண்டும் என அவர் கூறினார்.

### யூதர்களுக்கு எதிரான போக்கு வரலாற்றுக் கண்ணோட்டம்

யூத மக்களைக் கொன்று குவித்து ஒரு இனப் பேரழிவை ஏற்படுத்தியதற்கு யார பொறுப்பு? ஜேர்மன சர்வாதிகாரி அடால்ஃப் ஹிட்லரா? எஸ்.எஸ். சிறப்புப் படையா? ஜேர்மன் மக்களா? அல்லது ஐரோப்பா முழுவதுமா? என்கின்ற விவாதம் தொடர்கையில், யூத மக்களுக்



கெதிரான உணர்வு திடீரென முளைத்துவிடவில்லை என்பதை யாரும் மறுக்கமாட்டார்கள். யூத மக்கள் கொடுமையாளர்களாக காட்டப்படுவது ஐரோப்பாவில் பல நூற்றாண்டுகளாக நடைபெற்று வந்துள்ளது.

கி.பி.நான்காவது நூற்றாண்டில் ஸ்பெயின் நாட்டில் யூதர்களுக்கெதிரான முதலாவது கிறிஸ்தவ தேவலாய சட்டங்கள் கொண்டுவரப்பட்டன. யூதர்கள் மதம் மாறாதவரை கிறிஸ்தவர்கள் அவர்களை திருமணம் செய்து கொள்வதற்கு தடை விதிக்கப்பட்டது. பின்னர் யூதர்கள் கட்டாய மத மாற்றத்திற்கு உள்ளாககப்பட்டனர். கடைசியில் இங்கிலாந்து, பிரான்ஸ் மற்றும் ஸ்பெயின் நாடடில இருந்த அனைத்து யூதர்களும் வெளியேறறப்பட்டனர். கிறிஸ்தவ குழந்தைகளை யூதர்கள் பலி கொடுக்கிறார்கள் என்கின்ற குற்றச்சாட்டுக்கள் எழுந்தன.

யூதர்கள் அடிமைகளாக்கப் பட்டனர். 14ஆம் நூற்றாண்டில் கறுப்பு மரணம் என்றழைக்கப்பட்ட பிளேக் நோய் பரவியபோது கிணற்று நீரில் யூதர்கள் விஷம் கலந்தே கொள்ளை நோயை பரவ வைத்தனர் என்று கூறி ஜேர்மனியில் ஆயிரக்கணக்கான யூதர்கள் கொன்று குவிக்கப்பட்டனர்.

யூதர்கள் தங்களை இனம் காட்டும் வகையில் குறிப்பிட்ட உடையை அணியவேண்டும். நிர்வாகத்தில் பதவிகள் வகிக்கக்கூடாது. நகரின் ஒரு குறிப்பிட்ட பகுதியில் மட்டுமே அவர்கள் வசிக்கவேண்டும. ஹிப்ரு புத்தகங்கள் எரிக்கப்பட வேண்டும் என்றெல்லாம் உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டன.


நடைபெற்ற இனப்பேரழிவு யூத வரலாற்றில் ஒரு கறைபடிந்த அத்தியாயம்.

ஆனால், யூதர்களுக் கெதிரான நாஷிகளின் நடவடிக்கை யினை மட்டும் தனியே எடுத்து ஆராயாமல் அதற்கு முன்னதாக என்னென்ன நடைபெற்றன; யூதர் களுக்கெதிராக இப்பொழுது என்ன நடைபெறுகிறது என்பதையும் சேர்த்தே ஆராயப் படவேண்டும்.

(து)

# எஸ்.பி.யின் விடுதலைக்காக தொடர்ந்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்

**ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு**



(கொழும்பு)

நீதிமன்றத்தை அவமதித்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு வெலிக்கடைச் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுளள முன்னாள் அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்கவை எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் சந்தித்துப் பேசியுள்ளார்.

எஸ்.பி.திஸாநாயக்கவைச் சந்தித்துக் கலந்துரையாடிய பின்னர் செயதியாளர்களிடம் கருத்து வெளியிட்ட ரணில் விக்கிரமசிங்க,

எஸ்.பி.திஸாநாயக்கவின் விடுதலைக்காக எம்மால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் அனைத்தும் தொடர்ந்தும் இடம்பெறும்.

அவரின் வேண்டுகோளுக்கிணங்கவே சுனாமியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஒருமாத காலமாக நிவாரணம் வழங்கும் நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை அளிக்கப் பட்டது.

இந்த நிவாரண நடவடிக்கை மேற்கொள்ளும்போதே அவரின் விடுதலைக்கான நடவடிக்கைகளும மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவித்தார். (ற-8)

# பாடசாலைகள் மீண்டும் திறப்பு

(கொழும்பு)

ஆழிப்பேரலைகளினால் பாதிக்கப்படட மக்கள் தங்கவைக்கப்பட்டிருந்த சுமார் 150ற்கும் மேற்பட்ட பாடசாலைகள் கல்வி நட[illegible]க் கைகளுக்காக மீண்டும் திறக்கப்பட்டுள்ளன.

இந்தப் பாடசாலைகள் நலன் புரி நிலையங்களாக இயங்கி வந்தன. சுமார் 40 பாடசாலைகளில் சுனாமியினால் பாதிக்கப்பட்ட மக்கள் தங்கியிருந்தனர்.

எனினும் பாதிக்கப்பட்டோர் [illegible]கியுள்ள ஏனைய பாடசாலைகளும் விரைவில் திறக்கமுடியுமென கல்[illegible] அமைச்சின் செயலாளர் தெரிவித்தார். (ற-08)

**கடல் கொந்தளிப்பினால்**

# பணநோட்டுக்கள் சேதமடைந்திருப்பின் வங்கிகளை உடனடியாக நாடுங்கள்!

கடல் கொந்தளிப்பு காரணமாக ரூபா நோட்டுக்கள் பாவனைக்கு உதவாத விதத்தில் பாழடைந்திருப்பின் அருகில் உள்ள வர்த்தக வங்கிகளிலோ அல்லது மத்திய வங்கியிலோ ஒப்படைத்து புதிய நோட்டுக்களைப் பெற்றுக்கொள்ள முடியுமென மத்திய வங்கியின் கரன்சி பிரிவு அறிவித்துள்ளது.

பழுதடைந்த ரூபாய் நோட்டுக்களை வங்கிகளில் மாற்றும்போது அதேநடைமுறையைப் பின்பற்றுமாறும் மத்தியவங்கி கேட்டுக்கொணடுள்ளது.

இதேவேளை, கரையோரப் பகுதிகளில் கடல் கொந்தளிப்பினால் பாதிக்கப்பட்ட வங்கிகளில் ரூபா நோட்டுக்கள் பழுதடைந்துள்ளதாக இதுவரை மத்திய வங்கிக்கு தகவல்கள் எதுவும் கிடைக்கவில்லை.

அந்த அளவுக்கு பெட்டகங்கள் பெருமபாலும் நீர் புகமுடியாதவாறு விசேடமாகத் தயாரிக்கப்பட்டவையாகும்.

எனினும் கருமபீடங்களில் இருந்த பணநோட்டுக்கள் பழுதடைந்திருக்கலாம்.

அவ்வாறு பழுதடைந்த நோட்டுக்களுக்குப் பதிலாக (அவற்றைப் பொறுப்பேற்ற பின்னர்) புதிய நோட்டுக்கள் புழக்கத்தில் விடப்படுமென மத்திய வங்கியின் கரன்சி பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (க)

# பண்டத்தரிப்புப் பகுதிகளில் நெருப்புக்காய்ச்சல் பரவுகிறது

**தடுப்பு நடவடிக்கைகளில் சுகாதார பிரிவினர் தீவிரம்**

(சுதுமலை)

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள பண்டத்தரிப்பு, சாந்தை பகுதிகளில் திடீரென நெருப்புக்காய்ச்சலால் பாதிககப்பட்டவர்கள் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக சுகாதார பணிமனை புள்ளிவிபர அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஒருமாத காலப்பகுதிக்குள் பத்திற்கும் மேற்பட்டோர் நெருப்புக்காய்சசலால் பீடிக்கப்பட்டுள்ளதாகவும் இதனால் பாதிப்பு ஏற்படாதவாறு முற்காப்பு சுகாதார நடவடிக்கைகள் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் தற்பேது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

சுகாதார பகுதியினரால் குடிநீர் பெறும் சகல கிணறுகளிற்கும் குளோரின் இடும பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பாக பாடசாலைக் கிணறுகள் துப்பரவு செய்யப்பட்டு குளோரின் இடப்பட்டுள்ளதாகவும் அப்பகுதியின் பொதுச் சுகாதார பரிசோதகர் பி.சிவரூபன் தெரிவித்துள்ளார்.

அத்துடன் உணவு விற்பனையாளர்கள், குளிர்பான விற்பனை நிலைகள மற்றும் தனியார் உணவு தயாரிப்பு இடங்களிலும் உரிய சுகாதார முறைப்படி உணவு தயாரிக்கும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இத்தடுப்பு நடவடிக்கைகளில் சுகாதாரத் தொண்டர்கள் வீடு வீடாகச் சென்று சுகாதாரம் பேணும நடவடிக்கையில ஈடுபட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ப-252)

# மீள் பார்வை

# யாழ்ப்பாணத் தமிழரசர் வரலாறும் காலமும்

வேலணை பண்டிதர் பொ.ஜெகந்நாதன் 52

29. சிங்கையாரிய பரம்பரை முதல் மன்னன் சிங்கையாரியனேயன்றிக் கலிங்க மாகனல்ல.

30. சிங்கையாரியன் வந்த ஆண்டு எண்ணூற்றெழுபத்தைத்தான் 1170 என்று பொருள் கண்டு கலிங்க மாகன் வந்த ஆண்டென்று பிறர் நிச்சயித்தனர். அப்பொருள் பிழை எனவே வந்தவன் 870 உடைய வன்தான். அவன் சிங்கை ஆரியன்.

31. நல்லூர் ஊரால் வரும் பெயர், சிங்கை இடுகுறியால் வரும்பெயர் யாழ்ப்பாணம் தேசத்தால் வரும்பெயர்.

## 44. யா.வை.விகாரரும் யாசகாரரும் உரைத்த பிழைகளிலனேகமானவை

1. வல்லிபுரத்திலே சிங்கை நகரைக் கண்டமை.
2. கலிங்கமாகன்தான் சிங்கைநகரைக் கட்டினான் என்றமை.
3. கலிங்கமாகன் வருகை யாழ்ப்பாணத்தில் நிகழாதிருக்க நிகழ்ந்தது என்றமை.
4. இலக்கிய சகாப்தம் எண்ணூற்றெழுபது என்பதற்கு 870 என்று பொருள் காணாமை 1/70 என்னும் பொருள் கண்டமை.
5. நல்லூரில் சிங்கைநகரைக் கண்டுகொள்ள இயலாதிருந்தமை.
6. செங்கடக நகரைக் காணாதிருந்தமை.
7. இடமும் காலமும் சுட்டாத சாசனத்தை வல்லிபுரத்தினைக் குறித்ததாக எண்ணியமை.
8. யாழ்ப்பாணச் சரித்திரத்தின் உயிர்க்குயிராக விளங்கும் கைலாயமாலையின் உண்மையைத் தெரிந்து கொள்ள இயலாமை.
9. செங்கடக நகரின் பழங்கட்டிடத்தினை சிங்கைநகர் என்று நிச்சயித்தமை, கனகசூரியனும் மக்களும் வல்லிபுரத்துச் சிங்கைநகரியில் இருந்து நல்லூருக்கு வந்து குடியேறினர் என்றமை.
10. ஆதியில் கட்டிய சிங்கைநகர் மதில் போர்த்தர்படை எடுத்த போதிருக்கவும் அதை அறியாமல் செண்பகப்பெருமாள் அந் நல்லூர் நகரை அழித்தான் என்றமை.
11. திரும்ப அவனே கட்டினான் என்றமை.
12. கனகசூரியனும் மக்களும் வல்லிபுரத்தில் சிங்கைநகர் பாழாய்ப்போனபடியால் திரும்ப நல்லூரில் வந்து குடியேறினார்கள் என்றமை.
13. கைலாயமாலையிற் பாடப்பட்ட சிங்கையாரியனும் கலிங்கமாகனும் ஒன்றென்றமை.
14. யா பாடி வரலாற்றை நீக்கச் சொன்னமை.
15. மாருதப்பிரவாகவல்லி வரலாறு கற்பனை என்றமை.
16. சிங்கை ஆரியர் பரம்பரையை ஆதிச்சிங்கை ஆரியன் கீழ் அட்டவணைப்படுத்தாமல் கலிங்கமாகன் கீழ் நாம் ஆவலியில் அட்டவணைப்படுத்தியமை.
17. மாவிட்டபுரக் கந்தசுவாமி கோயில் அர்ச்சகர் சின்னமனத்தார் விருந்தைப் பாராட்டி அமைச்சர் புவனேகவாகு பாடிய பாட்டைச் செண்பகப் பெருமாள் பாடினான் என்றமை.
18. கோட்டைச் சிம்மாசனத்துக்குப் போன பின் அவ்வரசன் பெறும் ஸ்ரீசங்கபோதி என்னும்பட்டப் பெயரை, இங்கே நல்லூரில் ஆளும் போதே செண்பகப்பெருமாள் பெற்றுக் கொண்டு அரசாண்டான் என்றமை.
19. அமைச்சர் புவனேகவாகு கட்டிய நல்லூர்க் கந்தசுவாமி கோயிலைப் புத்த சமயத்தவனான செண்பகப்பெருமாள் கட்டினான் என்றமை.
20. நல்லூரிலே போர்த்தர் படை சிங்கைநகர் மதிலைத் தாண்டிப் போனதென்று 'பாதர் குவீறோஸ்' சொல்ல அது அப்பெயருடைய அரண் என்று அதையறியாமற் பிழையாகச் சமாதானம் சொன்னமை.
21. கலிங்கமாகன் யாழ்ப்பாணத்துக்கு வந்ததைச் சான்று காட்டாமல் அவன் மேல் யாழ்ப்பாணச் சரித்திரத்தை எழுதியமை.
22. யாழ்ப்பாணன் வரலாற்றை நீக்கச் சொன்னமை.
23. சிங்கையாரியன் பாண்டிமழவனால் அழைக்கப்பட்டு வந்ததை இல்லை என்றமை.
24. மாருதப்பிரவாகவல்லி கதையைக் கற்பனை என்றமை.
25. சிங்கையாரியனும் கலிங்கமாகனும் ஒருவரே என்றமை.
26. வல்லிபுரத்தில் உள்ள செங்கடக நகரையறியாது அதனைச் சிங்கைநகர் என்றமை. வல்லிபுரம்-வல்லிபட்டணம்.
27. காலிங்க என்ற பதத்தைத்தான் கூழங்கையென்று வைபவமாலையார் சொன்னார் என்றமை.
28. நல்லூர் நகரை செண்பகப்பெருமாள் கட்டினான் என்றமை.
29. யா. வைபவமாலை கைலாயமாலையாம் ஆதார நூல்களின் நேர் முடிபுகளுக்கு நேர்மாறாகத் தத்தம் நூல்களை வெளியிட்டமை.
30. சிங்கையாரின் அரசர் பரம்பரையைக் கலிங்கமாகன் கீழ் அட்டவணைப்படுத்தி அவன் பரம் பரம்பரையாகக் காட்டியமை.
31. யாழ்ப்பாணம் என்னும் பெயர் யாப்பாநெ என்ற சிங்களச் சொல்லில் இருந்துதான் வந்ததென்றமை.
32. சிங்கையாரினால் நல்லூரில் கி.பி.948இல் அமைந்த சிங்கை தகரைக் கலிங்கமாகனால் கட்டப் பட்டதென்றால் அது வல்லிபுரத்தில் கட்டப்பட்டதென்றால் 1248ல் கட்டப்பட்டதென்றால் மும்மடிப்பிழை, இவ்வாறே இவர்கள் கூற்றிலே பலமடிப் பிழைகளும் வேறு பிழைகளும் வருகின்றன. அவைகளை வாசகர்தாம் படித்து அறிந்து கொள்ள வேண்டும்.
33. சிங்கையாரியர் 3 தலைநகர் கட்டிய வரலாறில்லை அவர்களுடைய 3 தலைநகர்க் களமும் இல்லை. அவர்களுடைய தலைநகர் களம் ஒன்றே ஒன்றுதான் அறியப்பட்டிருக்கிறது.

## 45. முதற்குறிப்புகளும் விளக்கமும்

1. சு.ஞா.காரர் சுவாமி ஞானப்பிரகாசர்
2. செ.இ.காரர் செ.இராசநாயக முதலியார்
3. யா.ச.யாழ்ப்பாணச் சரித்திரம்
4. A.J.Ancent Jaffna
5. யா.வை.வி.யாழ்ப்பாண வைபவ விமர்சனம்
6. யா.வை.மா.யாழ்ப்பாண வைபவமாலை
7. யா.வை.பா.யாழ்ப்பாண வை.யா.பாடல்
8. கை.மா.கைலாயமாலை
9. கை.மா.கண்.கைலாயமாலைக் கண்ணிகள்
10. செ.சே.மா.செகராச சேகரமாலை
11. த.பா.தி.தனிப்பாடற் திரட்டு

## 46. இந்நூலின் ஆதார நூல்கள்

1. செகராச சேகராமாலை 2. யாழ்ப்பாண வைபவமாலை 3. கைலாயமாலை 4. வைபவமாலை 5. யாழ்ப்பாண வைபவ விமர்சனம் 6. யாழ்ப்பாணச் சரித்திரம்-செ.இ. 7. ANCENT JAFFNA செ.இ. 8. யாழ்ப்பாணச் சரித்திரம் ஆ.முத்துத்தம்பிப்பிள்ளை 9. யாழ்ப்பாணச்சரித்திரம் முதலாம்பாகம் டானியேல்யோன் 10. யாழ்ப்பாணக் குடியேற்றம் முதலாம் பாகம் சிவானந்தன் 11. வன்னியர் கலாநிதி சி.பத்மநாதன்
கள்ளியங்காட்டுச் செப்பேடு கலாநிதி செ.குணசிங்கம் 12. கள்ளியங்காட்டுச் செப்பேடு ஓதுவார் சிவக்கொழுந்து தந்தவை 13. The kingdom of Jaffna S.Pathmanathan
14. யாழ்ப்பாண இராச்சியத்தின் தோற்றம் கலாநிதி கா.இந்திரபாலா 15. Conquest of Ceylon பாதர் குவைறோஸ்
16. கோட்டைவாசல் தோம்புகள் 17. குயிற்றூது இன்னும் வேறும்பல நூல்கள் 18. நல்லூர்க் கந்தசுவாமி குலசபாநாதன் 19. கந்தவேள் கோட்டம் செங்கையாழியான். (முற்றும்)

## நோர்வே ஒஸ்லோவில் நடைபெற்ற ஆழிப்பேரலை நினைவேந்தல் நிகழ்வு



(ஒஸ்லோ)

கடற்புவி நடுக்க ஆழிப்பேரலை அனர்த்தத்தின் துயர் சுமந்த 31வது நாள் நிகழ்வு தேசிய துக்கதினமாகப் பிரகடனப்படுத்தப்பட்டது.

ஆழிப்பேரலையால் தமிழர் தாயகம், இலங்கை உட்பட தெற் காசியப் பிராந்தியம் மற்றும் உலக நாடுகளில் உயிர் நீர்த்த அனைத்து மக்களையும் நினைவு கூர்ந்து ஒஸ்லோ்விலும் அன்றைய தினம் நினைவுக்கூட்டம் இடம்பெற்றது.

இந்நினை வேந்தல் கூட்டம், அன்னைபூபதி தமிழ்க் கலைக்கூட றொம்மன் வளாகத்தில் மாலை 7.00 மணி முதல் 8.00 மணிவரை இடம்பெற்றது.

முதலில் உயிர்நீர்த்த மக்களுக்கான பொதுச்சுடர் ஏற்றப்பட்டு அகவணக்கம் செலுத்தப்பட்டது. பொதுச்சுடரினை தாயகத்திலிருந்து வருகை தந்திருந்த ஒளிவீச்சு பொறுப்பாளரும் கவிஞருமான வீரா ஏற்றிவைத்து, நினைவுரையும் ஆற்றினார்.

தொடர்ந்து அலை பறித்த மக்களின் நினைவு தாங்கிய விருத் தப்பாடல், கவிதைகள், நினைவுரைகள் என்பன இடம்பெற்றன.

"அலையால் அள்ளப்பட்ட மக்களை நினைவுகூர்ந்து சுடரேற்றி, உறவுகளை இழந்து அல்லலுறும் மக்களின் துயர்களில் பங்கு கொள்கின்றோம்" என்பதற்கான கூட்டமாக இது அமைந்ததோடு, தமிழ் மக்கள் முன்னுள்ள அடுத்த கட்டப் பணிகளை வீச்சாக்குவதற் கானதும் எமது மக்களை துரிதகதியில் இயல்பு வாழ்வுக்குள் இட்டுச் செல்வதற்கான பணிகளுக்கு அந்த மக்களின் சாவு மீது உறுதி யெடுத்துக் கொள்ளல் என்ற வகையில் இந்நினைவுக் கூட்டம் அமைந்தது. (ற)

## வீதி விளக்குகளை பொருத்த நடவடிக்கை

(துன்னாலை)

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட மக்கள் கூடும் இடங்கள் மற்றும் முக்கிய சந்திகளுக்கு பிரதேசசபை யினால் தெருவிளக்குகள் பொருத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

முன்னர் இலங்கை மின்சாரசபையினரிடம் வெளிநாட்டு நிறுவனங் கள் வழங்கிய தெருவிளக்குகள் அனைத்தும் பொருத்தப்பட்டு அரை வாசிக்கு மேற்பட்டவை தற்போது பழுதடைந்த நிலையில் உள்ளன.

ஆயினும் அரச திணைக்கள, வங்கி அதிகாரிகள் வசிக்கும் இடங்களில் உள்ள விளக்குகள் ஒழுங்காக ஒளிர்கின்றன. (க-10)



# நேபாளத்தில் தீவிரவாதிகள் அட்டகாசம்

## 1000 மாணவர்கள், ஆசிரியர்கள் கடத்தல்


(காத்மண்டு)

நேபாளத்தில் இரண்டு வெவ்வேறு மாவட்டங்களில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்களையும், ஆசிரியர்களையும் மாவோ தீவிரவாதிகள் நேற்றுமுன்தினம் கடத்திச்சென்றனர்.

நேபாளத்தின் கிழக்குப் பகுதியில் உள்ள சங்குவாசபா மாவட்டத்திலுள்ள ஐந்து பள்ளிகளைச் சேர்ந்த 650 மாணவர்களையும், நான்கு ஆசிரியர்களையும் மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் கடத்திச் சென்றனர்.

கடத்தப்படட மாணவர்கள் அனைவரும் ஆரம்பப்பள்ளி மற்றும் உயாநிலைப் பள்ளி மாணவர்கள். மற்றொரு சம்பவத்தில் தாடிங் மாவட்டத்தைச்சேர்ந்த பள்ளியிலிருந்து 400க்கும் மேற்பட்ட மாணவர்களையும், ஆசிரியர்கள் சிலரையும் தீவிரவாதிகள் கடத்திச சென்றனர். கடத்தப் பட்டவாகள் மறைவான இடத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். கடத்தலுக்கான காரணம் பற்றித் தெரியவில்லை. (து)

## பூமியின் வெப்பம் அதிகரிப்பு



பூமியின் வெப்பம் யாரும் எதிர் பாராத படி பதினொரு பாகை செல்சியஸ் அதிகரித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

150 நாடுகளில் சுமார் 95 பேரினால் மேற்கொள்ளப்பட்ட அளவீடுகளின் பின்னர் இந்த முடிவு வெளியாகியுள்ளது. இவ்விதம் அதிகரித்துள்ள வெப்பம் காலநிலை மாற்றம், கடும்மழை, பெருவெள்ளம் போனற அபாயங்களை ஏற்படுத்த வழியிருக்கிறது என்று கூறபபடுகிறது. (து)




## சந்திரனுக்கு ஆளில்லா விண்கலம் 2007 இல் இந்தியா அனுப்பும்

சந்திரனுக்கு ஆளில்லா விண்கலம் வரும் 2007ஆம ஆண்டு அனுபபபபடும என்று இந்திய விண்வெளி ஆய்வு அமைப்பின் தலைவர் மாதவன் நாயா தெரிவித்தார்.

சென்னை சத்தியபாமா நிகர் நிலை பல்கலைக்கழகத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சியொன்றில் கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

'சந்திரனுக்கு ஆளில்லா விண்கலத்தை அனுப்பும் திட்டத்தை 'இஸ்ரோ' செயற்படுத்தி வருகிறது. இதற்கான வமைமைப்புப் பணிகள் முடிந்துவிட்டன. இதற்காக பெங்களூர் அருகே சிறப்பான கருவிகளுடன் கூடிய கட்டடங்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன' எனறு கூறிய அவா, சுற்று வட்டப் பாதையில் நிறுத்தப்படும் இந்த ஆளில்லா விண்கலம் சந்திரனைச் சுற்றி வந்தபடி தகவல்களை அளிக்கும்; விண்கலத்துடன் பொருத்தப்படும் கருவியும் தகவல்களை வழங்கும்' என்றார்.

இன்சாா்ட் 4ஏ செயற்கைக் கோள் வரும் மே மாதம் பிரஞ்சு கயானாவிலிருந்து விண்ணில் செலுத்தப்படுமென்றும், 3.5 தொன் நிறையுள்ள இச் செயற்கைக் கோள் 100 ரீ.விகளின் நிகழ்ச்சிகளை ஒளி பரப்பும் திறன் படைத்தது எனறும இதில அமைக்கப்படும் சிறப்புக் கருவி மூலம் சுனாமி ஏற்படுவது குறித்து முன்கூட்டியே அறியமுடியும் என்றும் அவர் மேலும் தெரிவிததார். (து)

## தற்கொலைக்கு முயன்ற வாலிபரால் ரயில்கள் நேருக்கு நேர் மோதல்

(லொஸ்ஏஞ்சல்)

அமெரிக்காவில் உள்ள லொஸ் ஏஞ்சல் நகரைச் சேர்நத 25 வயதான ஜீவான மனுவேல் அல்வார்ஸ் மனநிலை பாதிக்கப்பட்டவர்.

தற்கொலை செய்வதற்காக இவர் ஒரு ஜீப்பில் ஏறி ரயில் நிலையத்திற்குச் சென்றார்.

அங்கு ரயில் வரும்போது தண்டவாளத்தின் குறுக்கே ஜீப்பை நிறுத்தி தற்கொலை செய்ய அவர் திட்டமிட்டிருநதார்.

அந்த வழியாக ரயில் வந்தபோது ஜீவான் தணடவாளத்தின் குறுக்கே ஜீப்பை நிறுத்தினார். அப்போது ஒரே நேரத்தில் 2 தண்டவாளங்களில் பயணிகள் ரயில் வந்துகொண்டு இருந்தது. ஜீப்பும் இரண்டு தண்டவாளங்களில் நின்றுகொண்டிருந்தது.



ரயில்கள் அருகே வந்தபோது கண் இமைக்கும் நேரத்தில் ஜீப்பில் இருந்து கீழே குதித்து ஜீவான் தப்பித்துக் கொண்டார்.

ஆனால் தண்டவாளத்தில் நின்று கொண்டிருந்த ஜீப்மீது மோதிய இரண்டு ரயில்களும் நேருக்கு நேர் மோதி தீப்பற்றிக்கொண்டன.

இந்த விபத்தில் 10 பேர் பலியானார்கள். 200 பேர் படுகாயமடைந்தனர். விபத்து நடபபதற்குக காரணமான ஜீவானை பொலிஸார் கைது செய்தனர்.

அப்போது அவர் என்னை மன்னித்து விடுங்கள் ஏன்று பொலிஸாரிடம் கதறி அழுதார். (து)

## சுமத்ரா தீவில் மீண்டும் நிலநடுக்கம்

தென்கிழக்கு ஆசிய நாடான இந்தோனேசியாவின் 6000 தீவுகளில் மிக முக்கியமான தீவு சுமத்ரா தீவு. இந்தத் தீவை கடந்த ஒரு மாதமாக தொடர் நிலநடுக்கங்கள் படாதபாடு படுத்தி வருகின்றன.


இதுவரை அங்கு 300க்கும் மேற்பட்ட நில அதிர்வு தோன்றியது. இன்னும் சில மாதங்களுக்கு அங்கு நிலஅதிர்வு நீடிக்கும் என்று நிபுணர்கள் எச்சரித்துள்ளனர். இதனால் சுமத்ரா தீவு மக்களிடையே ஏற்பட்ட பீதி இன்னும் விலகவில்லை.

இந்த நிலையில் நேற்றுமுன்தினம் அதிகாலை 4மணிக்கு சுமத்ரா தீவின் வடக்குப் பகுதியின் மேறகு கடலோரத்தில் திடீர் நிலநடுக்கம் ஏற்பட்டது. அது 6.1 ரிக்டா ஸ்கேல் அளவுக்கு பதிவாகியிருந்தது. சில வினாடிகளுக்கு அது நீடித்தது.

இந்தோனேசியாவிலிருந்து சுமார் 305 கிலோமீற்றர் தொலைவில் நில நடுககம் மையம் கொண்டிருநததால் அதன் தாக்கம் இந்தோனேசியாவிலும் எதி ரொலிததது. இதன்னால் மக்கள் பீதி அடைந்தனர்.

ஆனால் தலைநகர் ஜகார்த்தாவுக்கு 1695 கிலோமீற்றர் தூரத்தில் அதிர்வு ஏற்பட்டதால் தலைநகாில் எந்த சலசலப்பும் ஏற்படவில்லை.

நேற்றுமுன்தினம் நிலநடுக்கம் ஏற்பட்ட பகுதியில்தான் கடந்த ஒருமாதமாக அடுத்தடுத்து நிலநடுக்கம் எற்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (து)



திருப்பூர் அங்கேரி பாளையம் பகுதியைச் சேர்ந்தவர் ரெயிலர் மோகன் குமார். நூலை ஊசியில் நுழைத்து நாள்தோறும் வேலை செய்து வந்த இவருக்கு இதைப் பயன்படுத்தி எதையாவது வித்தியாசமாகச் செய்யவேண்டும் என்ற எண்ணம் வர தனது ஓய்வு நேரத்தில் மூக்கு வழியாக நூலை விட்டு வாய் வழியாக இழுத்துப் பயிற்சி செய்தார். ஒருநாள் திடீரென்று நூலில் ஒன்றரை அடி நீள மின்சார வயரை இரு மூக்குத் துவாரங்களிலும் நுழைத்து வாய் வழியே வெளியே உருவி எடுத்த வயரின் நுனியில் ஒரு பல்பை மாட்டி மின்சார இணைப்புக் கொடுத்ததும் அந்த பல்பு பளிச்சென எரிய எல்லோருமே பார்த்து அதிசயித்தனர். பயிற்சியை செய்யும்போது மூக்கிலும் கண்ணிலும் தண்ணீர் ஒழுகுவதை மட்டும் தடுக்க முடியவில்லை. மற்றபடி இதில் வேறு பிரச்சினை எதுவும் இல்லை என்கிறார் அவர்.

## விண்வெளியில் நடக்கவுள்ள அமெரிக்க, ரஷ்ய விண்வெளி வீரர்கள்

விண்வெளியில் அமைக்கப்பட்டுள்ள சர்வதேச விண்வெளி ஆராய்ச்சி நிலையத்தில் கடந்த மூன்று மாதங்களாகத் தங்கியிருந்த இரண்டு விண்வெளி வீரர்கள், முதல் முறையாக வெளியே வந்து நடக்கவுள்ளனர்.

ரஷ்யா, அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் சேர்ந்து விண்வெளியில் சாவதேச விண்வெளி ஆராய்ச்சி நிலையத்தை நிறுவியுள்ளன. தற்போது, இந்த நிலையத்தில் அமெரிக்க விண்வெளி வீரர் லெராய் செயினும், ரஷ்ய விண்வெளி வீரர் சலிசான் ஷரி போவும் தங்கியுள்ளனர். மூன்று மாதங்களுக்கு முன் நிலையத்துக்குச் சென்ற அவர்கள், இதுவரை வெளியே வந்து நடக்கவில்லை. இப்போது தான்முதல முறையாக இவர்கள் இருவரும் வெளியே வந்து நடக்கவுள்ளனர்.

[illegible]யத்தில், விண்வெளி நிலையம் யாரும் இல்லாமல் செயல்பட உள்ளது. கடந்த [illegible]லங்களில் இரண்டு வீரர்கள் வெளியே வந்து நடப்பார்கள். ஒரு வீரர் உள்ளே இருந்து விண்வெளி நிலைய செயற்பாட்டைக் கண்காணிப்பார். இம்முறை, இரண்டு வீரர்கள் மட்டுமே அங்கு உள்ளதால் அவர்கள் இருவரும் வெளியே வந்து நடப்பதால் ஆராய்ச்சி நிலையத்தின் செயல்பாட்டை நாசா விஞ்ஞானிகள் கீழே இருந்து கண்காணிக்கவுள்ளனர்.

இரு வீரர்களும் ஐந்தரை மணி நேரம் வெளியே நடக்கவுள்ளனர். இவர்களில் செயின் ஏற்கனவே சென்ற பயணங்களின்போது நான்கு முறை நிலையத்தை விட்டு வெளியே வந்து நடந்துள்ளார். ஷரிபோ முதல் முறையாக விண்வெளியில் நடக்கவுள்ளார். (து)

## குளிர்காய மூட்டிய தீயால் பலகோடி ரூபா நாசம்

(நியூயோர்க்)

எதையோ செய்யப்போய், எங்கேயோ போய் முடிந்த கதைகள் ஏராளம். அமெரிக்காவில் மன்ஹட்டனில் இப்படியொரு சம்பவம் நடந்திருக்கிறது.

அங்கு வீடில்லாத ஒருவர் கடும் குளிரைச் சமாளிப்பதற்காகத் தீ மூட்டினார்.

ஆனால் அது மெல்ல மெல்ல ரயில் கட்டுப்பாட்டு அறைக்குப் பரவியது. உளளூர் ரயில்கள் பற்றிய அதிமுக்கிய விபரங்கள் அதில் இருந்தன.

சர்க்யூட்கள், வயர்கள் அனைத்தும் எரிந்து நாசமாகின. மேலும் உள்ளூர் ரயில பாதை இரண்டும் சேதமடைந்துவிட்டன. இதைச் சரி செய்ய 3-5 ஆண்டுகள் ஆகுமாம்.

மேலும் பல கோடிக்கணக்கான ரூபாய செலவும் பிடிக்கும். இதை மிகப் பெரிய பிரச்சினை என அதிகாரிகள் தெரிவித்தனர்.

2001இல் அமெரிக்க வர்த்தக மையங்களை விமானங்கள் தாக்கியதற்குப் பிறகு, அங்கு ஏற்பட்டுள்ள மிகப் பெரிய சேதமாகக் கருதப்படுகிறது. (து)

# இயற்கை அன்னை-தந்த

பாலும்-தேனும், பாங்கான-பச்சை அரிசிச்சோறும் கடல் வளமும்-பனை-தென்னை-வளங்களும், விளைநிலங் களும் மிக்க வீரம்செறிந்த இப்பிரதேசத்தின் பெருமையை யெல்லாம் பறைசாற்று மாப் போல் இயற்கை அன்னை, தந்நத ஒரு கொடை தான் ஊற்றங்கரை கரை நீர்- ஊற்று.

எல்லோராலும் பேசப்படும் பெருமைமிக்க இந்த-ஊற்றுங்கரை முல்லைத்தீவு மாவட்டத்தில் கரைதுறைபற்று பிரதேச செயலாளர், பிரிவில் முள்ளியவளைக்கிராமத்தின் ஆறாம் வட்டாரத்தில் அமைந்துள்ளது.

இற்றைக்கு அறுபது வருடங்களுக்கு முன் வரட்சி நிலவிய ஒரு காலப்பகுதியில் சதுர்ப்பு நிலமாக இருந்த இவ்விடத்தை ஊராரின் ஒத்துழைப்புடன் இவ்வூரைச் சேர்ந்த கனகப்பா என்பவர் இதனை ஒரு அகழியாக்கி நீர் வெளியே போகாதவாறு நான்கு பக்கங்களுக்கும் பனை மரங்களால் பாதுகாப்பு அரண் கட்டி நீரைப்பாதுகாப்பாக வைத்திருந்தனர்.

இந்த நீர் ஊற்றின் அதிசயதைக்கண்ட இப்பகுதி மக்களின்மனங்களில் இதனை ஒரு நீராடுவதற்குரிய கேணியாக்க வேண்டும் என்ற எண்ணம் வேரூன்றியது. உண்மையில் அவர்கள் எண்ணம் வீண்போகவில்லை. அப்போது இப்பிரதேசத்தை சேர்ந்த முன்னாள் வவுனியா பாராளுமன்ற உறுப்பினர்,

தா.சிவசிதம்பரம் முன்னர் கிராம, கமத்தொழில்(வி.சி.ஓ) உத்தியோகத்தராக இருந்ததால் குறிப்பிட்ட இவ்விடத்தை ஒரு சிறுநீர்ப்பாசனத்திட்டமாக்கி அப்போது வவுனியா அரசாங்க அதிபராக இருந்த ரீ.இராசதுரை மூலம் அவரது நிதி மூலம் ஒரு கேணியாக வடிவமைக்கப்பட்டதே இந்த ஊற்றங்கரைக்கேணி.

இங்கே கோடை, மாரி என்று பாராது எந்நேரமும் தண்ணீர் நிரம்பி வழிந்தோடிக் கொண்டிருக்கும்காட்சியானது எல்லோரையும் அதிசயிக்க வைக்கின்றது. முல்லைத்தீவுக்கு வருவோர், இந்த ஊற்றங்கரைக் கேணியில் நீராடியே செல்வார்கள். கேணியின் தெற்குப்புறத்தில் விநாயகர் ஆலயம் ஒன்று அமைந்திருப்பது இதற்கு மென மேலும் சிறப்பைக் கொடுககின்றது.

இக்கேணியின் கிழக்குப் பக்கமாக உள்ள கிணற்றில் இருந்து நீர்நிரம்பி வழிந் தோடிக கொண்டிருப்பதையும், மேற்குப்பக்கமாக- கன்னியா வெந்நீரூற்று போன்று அமைக் கப்பட்டுள்ள ஒன்பது கிணறுகளும் அள்ள, அள்ள, தண்ணீர்

# அற்புத ஊற்று

நிரம்பிக் கொண்டிருப்பதையும் பார்க்க உண்மையில் ஓர் அதிசயமாகதான் உள்ளது.

இந்த நீர் ஊற்றுக்கு மேற்கே புதறிகுடங் குளமும் கிழக்கே நீராவிக்குளமும் அமைந்துள்ளதாலும் ஊற்றங்கரையில் இருந்து எந்நேரமும் தண்ணீர் ஓடிக் கொண்டிருப்பதாலும் இதன் கீழ் சுமார் 150 ஏக்கர் நிலத்தில் மூன்று போகமும் நெல்பயிரிடப்படுவது தனிச் சிறப்பாகக் கருதப்படுகின்றது.

ஊற்றங்கரை போன்ற ஒரு நீர் ஊற்றுவேறு எந்த ஒரு இடத்திலும் இல்லாததால் இவ்விடம் ஊற்றங்கரை என்றும், இதன் அருகில் உள்ள இடம் தண்ணீர் ஊற்று என்றும் காரணப் பெயரால் அழைக்கப்படுவது எந்நேரமும் இப்பிரதேசத்தை இத்தண்ணீர் ஊற்றை ஞாபகப்படுத்திக் கொண்டிருப்பது இப் பிரதேசத்துக்கு மேலும் சிறப்பை ஏற்படுத்துகின்றது.

இரவு-பகல் என்று பாராது எந் நேரமும் இங்கே மக்கள் பெருந் தொகையாக வந்து இந்நீரூற்றில் நீராடிச் செல்வதுடன், அருகில் அமர்ந்துள்ள விநாயகரையும் தரிசித்துச் செல்லும் காட்சி தினமும் கண் கொள்ளாக்காட்சியாக இருக்கின்றது.

இக் கேணியில் ஆண், பெண் இருபாலாரும் நீராடக் கூடியதாக இரு வேறு பகுதிகளாகப்பிரிக்கப் பட்டுள்ளதும் இதற்கு ஒரு தனிச்சிறப்பைக் கொடுக்கின்றது. ஆண்களும் பெண்களும் தனித்தனியே நீராடுவது மட்டுமல்லாமல் தண்ணீரை வேண்டியளவில், வேண்டிய மட்டத்தில் வைத்திருக்கக் கூடியதாக வடிவமைக்கப்பட்டுள்ளதும் இக்கேணிக்கு கொடுக்கப்பட்டுள்ள வேறு எங்குமில்லாதவாறான சிறப்பம்சமாகும்.

மேலும் முள்ளியவளையில் இருந்து 5.கி.மீ தூரத்துக் கப்பால் அடர்ந்த காட்டுப்பகுதியில் மனித நடமாட்டம் இல்லாத ''அடியூற்று'' என்று அழைக்கப்படுகின்றன ஒரு இடத்தில் கோடை, மாரி என்று பாராமல் தண்ணீர் எந்நேரமும் குபுக்,குபுக்,என்று ஓடிக்கொண்டிருப்பதும்- அந்நீர் குடிக்க மிகுந்த சுவையாக இருப்ப தும் இங்கே குறிப்பிடக்கூடியதாக உள்ளது.

**வே.ம.இந்திரநாதன்**
முல்லைத்தீவு செய்தியாளர்

அடியூற்றுக் கேணியானது 50 வருடங்களுக்கு முன் கட்டப்பட்டதாயினும் அதன் பின் திருத்த வேலைகள் எதுவும் மேற்கொள்ளப்படாததால் அதன படிக்கட்டுக்கள் சேதமடைந்துள்ளதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. அதனால் இதனை அரசாங்க நிதியில் இருந்தோ-அன்றேல் அரசசார்பற்ற நிறுவனங்களின் மூலமாகப்பெறக்கூடிய நிதியிலிருந்தோ புனர்நிர்மாணம் செய்ய வேண்டியது காலத்தின் கட்டாய தேவையாகவுள்ளது. அதனால் சம்பந்தப்பட்டவர்கள் இப்பணியினைமிக விரைவாகச் செய்ய வேண்டும். தவறின் வரலாற்றுச் சிறப்பு மிக்க இக்கேணி சேதமடைவது தவிர்க்க முடியாததாகி விடும்.

# சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்கு சிங்கப்பூரும் நிவாரண உதவிகள்

(கொழும்பு)


சுனாமி பேரலையினால் பாதிககப்பட்ட மக்களுக்கு சிங்கப்பூரால் இருந்து நிவாரணப் பொருட் களை அனுப்புவதற்கு சிங்கப்பூர் அரசாங்கம் திட்டமிட்டு இருப்பதாக அந்நாட்டு இலங்கைக்கான தூதுவர் தெரிவித்துள்ளார்.

23 கொள்கலன்களில் சுமார் 1கோடி ரூபாய் பெறுமதியான பொருட்கள் அனுப்பப்படவுள்ளதாக அவர் கூறினார்.

இதுதவிர ஜனாதிபதி செயலகத்தின் பொறுப்பில் இயங்கும் நிவாரண சேவைக்கான நிலையத்திற்கு சிங்கப்பூர் அரசாங்கத்தினால் 2கோடி ரூபாய் நிதியும் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் அந்நாட்டைச் சேர்ந்த 72 மருத்துவர்கள் அடங்கிய குழு ஒன்று மிக விரைவில் இலங்கைவந்து சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மருத்துவ சேவைகளை வழங்கவுள்ள தாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ற)



மந்திகை மருத்துவமனையில் அமெரிக்க வைத்தியர் ஒருவர் நோயாளி ஒருவரை வெளிமண்டபம் ஒன்றில் நின்றவாறே பரிசோதிக்கும் காட்சி.கடந்த செவ்வாய்க்கிழமையன்று இறுதிநேரத்தில் மருத்துவமனையிலிருந்து வெளியேறும் நிலையில் பரிசோதனையில் ஈடுபட்டிருப்பதைப் படத்தில் காண்க.



மந்திகை மருத்துவமனையில் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள அவசர சத்திர சிகிச்சைக் கூடத்தையும், தொண்டுபுரிய வந்துள்ள ஜேர்மன் நாட்டு வைத்தியரையும் அவர்கள் கொண்டுவந்துள்ள நவீன உபகரணங்களையும் படத்தில் காணலாம்.

படங்கள்:- எஸ்.இராமச்சந்திரன்

# செரினாவிடம் ஷரபோவா தோல்வி

அவுஸ்திரேலிய ஓபன் டென்



னிஸ் தொடரில் நடப்பு சம்பியனான ரோஜர்பெடரர் அதிர்ச்சித தோல்வி அடைந்தார்.

இவரை வீழ்த்திய மாரட்சபன் இறுதிப் போட்டிக்கு முன்னேறினார். பெண்கள் பிரிவில்ஷரபோவா தோல்வி அடைய சம்பியன் பட்டத்துக்காக அமெரிக்க வராங்கனைகள் செரினா, டேவன் போர்ட் மோதுகின்றனர். கிராண்ட்ஸ்லாம் அந்தஸ்து பெற்ற அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் தொடர் மெல்போனில நடக்கிறது. விறுவிறுப்பான அரையிறுதிப் போட்டிகள் நேற்று முன்தினம் நடந்தன. ஆண்கள் ஒற்றையர் பிரிவில் நம்பர் ஒன் வீரரான சுவிற்சர்லாந்தின் ரோஜர்பெடரர், 4ம் நிலை வீரரான ரஷ்யாவின் மாரட்சபனை எதிர்த்து விளையாடினார்.

முதல் செட்டில் பெடரர் 7-5 என்ற கேம் முன்னிலையில் வெற்றி பெற்றார். இரண்டாவது செட்டில்சபன், பெடரர்சர்வீசை பிரேக் செய்து 6-4 என்ற செட்களில் வெறறி பெற்றார். இத்தொடரில பெடரர் பெறும் முதல் தோல்வி இது.

இதன்பின், இருவரும் மாறி




மாறி செட்களைக் கைப்பற்றினர். இறுதியில் வெற்றியாளரை நிர்ணயிக்கக்கூடிய ஐந்தாவது செட்டில் பெடரர் சற்று பதறறத்துடனே ஆட்டத்தை தொடங்கினார்.

இதனைப் பயன்படுத்திக் கொண்ட சபன் ஆறாவது கேமில பெடரர்சர்வீசை பிரேக்செய்து முன்னிலை பெற்றார். பின்னர் சுதாரித்து ஆடிய பெடரர் தொடர்ந்து மூன்று கேம்களை கைப்பற்ற 6-6 என்ற சமநிலையை அடைந்தது. இதன் பின் நான்கு முறை ''மேட்ச் புள்ளிகள்'' கிடைத்தும், வெற்றியாக்கிக் கொள்ளத் தவறினார் சபன். கடைசியில் 9-7 என்ற பெரும் போராட்டத்திற்குப் பிறகு சபன் வெற்றி



பெற்றார். நடப்புச் சம்பியனான பெடரர் 7-5, 4-6, 7-5, 6-7, 7-9 என்ற செட்களில் அதிர்ச்சித் தோல்வி அடைந்தார். (ற)

# பாக்கிற்கு எதிரான போட்டியில் சச்சின் விளையாடுவார்

## கங்குலி நம்பிக்கை

பாகிஸ்தான் கிறிக்கட் அணி அடுத்தமாதம் 25 ஆம் திகதி முதல் இந்தியாவில் சுற்றுப் பயணம் செய்து மூன்று டெஸ்ட் மற்றும் 5 ஒருநாள் போட்டித் தொடரில் விளையாடுகிறது.

இந்தப் போட்டித்தொடரில் இந்திய அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின்டெணடுல்கர் ஆடுவாரா? மாட்டாரா? என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

காயமடைந்துள்ள அவர் காயம் முழுமையாக குணமடைந்தால் மட்டுமே பாகிஸ்தானுக்கு எதிரான தொடரில் ஆடுவேன் என்று அறிவித்துள்ளார்.

இந்தநிலையில் டெண்டுல்கர் பாகிஸ்தானுக்கு எதிரான தொடரில் ஆடுவார் என்று இந்திய அணியின் கப்டன் கங்குலி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக கங்குலி கூறியதாவது, பாகிஸ்தானுக்கு எதிரான தொடரில் டெண்டுல்கர் ஆடுவாரா? என்பது பற்றி இப்போதே சொல்வது சரியாகாது இன்னும் போட்டிக்கு ஒரு மாதத்திற்கு மேல்இருக்கிறது.

டெண்டுல்கர் இந்தத்தொடரில் ஆடுவதில் ஆர்வமாக இருக்கிறார். அது நடைபெறும் என்றும் நம்புகிறேன்.

பாகிஸ்தானுக்கு எதிரான தொடர் நல்லபோட்டியாக இருக்கும் இருதரப்பும் வெற்றிபெற போராடும் நமது அணிதனக்குரிய திறனை வெளிப்படுத்தினால் நன்றாக இருக்கும்.

அணியில் புதுமுக வீரர்கள இடம்பெறுவார்களா என்பது குறித்து தேர்வுகுழுதான் முடிவு செய்யும். (ற)

## விளையாட்டு செய்திகள்



சாண்டியாகோ நகரில் நடந்த கண்காட்சி கால்பந்து போட்டியில், மெக்சிகோ வீரர் அல்பர்டோ மெடினாவிடம் இருந்து பந்தை தட்டிச் செல்கிறார் சுவீடன் வீரர் ஸ்டீபன் இஷிஜகி யிட். இந்த போட்டியில் இரு அணிகளும் கோல் அடிக்காததால் ஆட்டம் 'டிரா'வில் முடிந்தது.

வாரி பெருக்கி வளம்படுத்து உற்றவை
ஆராய்வான் செய்க வினை - குறள்

வலம்புரி

## திட்டமிட்ட நிவாரணப் பணியே தேவையானது

கடல்கோள் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணப் பணியில் அரசும் விடுதலைப் புலிகளும் இணைந்து செயற்படுவதில் இணக்கப்பாடு ஏற்பட்டுள்ளதாக வெளிவந்த தகவல்கள் நிஜப்படுமாயின் அதனால் நாட்டின் சமாதானம் ஏற்படுவதற்கான சாத்தியப்பாடுகளும் அதிகரிக்கவே செய்யும்.

இயற்கை அனர்த்தம் இன, மத, மொழி வேறுபாடின்றி இந்த நாட்டின் மக்களைப் பாதித்துள்ளது. எனவே இவ் விடயத்தில் எந்தவித பாகுபாடும் இன்றி பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப் பணிகளை மேற்கொள்வது அனைத்துத் தரப்பினரின் கடமையாகும்.

நிவாரணப் பணிகளை மேற்கொள்ளும்போது பாதிப்பின் தன்மைக்கேற்ப நிவாரணம் வழங்கப்படவேண்டும். அதேவேளை மேற்கொள்ளப்படுகின்ற நிவாரணப் பணிகள் பாதிக்கப்பட்ட மக்களின் நுகர்வை ஈடுசெய்வதாக மட்டும் அமையாமல் வீடு, குடிநீர், தொழில் முயற்சி, கல்வி, மருத்துவம் என்ற விடயங்களை உள்ளடக்கியதாக அமைவது மிகவும் அவசியமாகும்.

இலங்கையைப் பொறுத்தவரை நாட்டின் பின்னடைவான அபிவிருத்தி நிலைமைக்கு ஒழுங்கான திட்டமிடல் இன்மையே காரணம் எனலாம். முன்கூட்டியே ஆய்வின்றி - திட்டமிடல் இன்றி கட்டடங்களை கட்டுவது பின்னர் அதனை உடைத்து விடுவது போன்றவை சாதாரண நிகழ்வுகளாகும். இதேபோன்று பொதுமக்கள் மத்தியிலும் திட்டமிட்ட செயற்பாடுகள் இல்லை என்றே கூற வேண்டும்.

குறிப்பாக ஆலயங்களை அமைப்பது பின்னர் அதனை உடைத்து புதிதாக நிர்மாணிப்பது, அரச நியதிகளின்படி வீடு, மதில் போன்றவற்றை அமைக்காது விடுவது போன்ற குறைபாடுகள் நிறையவே உண்டு.

இதனால் பொதுச் சட்டங்களை அமுல்படுத்துவது தடைப்பட அதனால் பொதுமக்களே பாதிப்படைகின்றனர். எனவே சுனாமியின் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான மீள் நிர்மாணப் பணியில் ஓர் பொதுவான யாப்பை அமைத்துக் கொண்டு அதனை அனைவரும் கடைப்பிடிக்கத்தக்கவாறு திட்டமிடலை மேற்கொள்ளவேண்டும்.

குறிப்பாக பாதிக்கப்பட்ட மக்களுக்கான வீடமைப்பை ஏற்படுத்திக் கொடுக்கும்போது கடற்கரையிலிருந்து எந்தளவு தூரத்தில் கட்டடங்கள் அமையவேண்டும் என்ற நியதிகளை சரியான முறையில் கடைப்பிடிப்பது அவசியமாகும். இதற்குள் செல்வாக்கு கலாசாரங்கள், அரசியல் தலையீடுகள் இருக்குமேயானால் மீள் நிர்மாணப் பணிகளால் எந்தவித பயன்பாடும் இன்றி போகும் என்பது உறுதி.

அதேவேளை வீடமைப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கின்றபோது எழுந்தமானமான தீர்மானங்களை எடுத்துக் கொண்டு அதனை நடைமுறைப்படுத்த முற்படுவதும் பாரதூரமான விளைவுகளையே ஏற்படுத்தும்.

கடந்த காலங்களில் இலங்கையில் ஏற்படுத்தப்பட்ட குடியேற்றங்கள், வீடமைப்புத் திட்டங்கள், கலை கலாசார விழுமியங்களிலும், கல்வி, தொழில் வாய்ப்பு போன்றவற்றிலும் எதிர்விளைவையே ஏற்படுத்தியது.

இந்தியா போன்ற நாடுகளில் அமைக்கப்பட்ட குடியேற்றங்கள், வீடமைப்புத் திட்டங்கள் யாவும் பெருவெற்றியைத் தந்துள்ளன. ஆனால் அந்த நிலைமை நம் நாட்டிற்கு பொருத்தமற்றதாக அமைந்தமையால், சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான வீடமைப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும்போது அந்த மக்களின் பின்புலங்கள், கலை, கலாசாரப் பின்னணிகள் பற்றி முக்கிய கவனம் எடுப்பது மிகவும் இன்றியமையாததாகும்.

# நாட்டை மீளக் கட்டியெழுப்புவதற்கு 1.8 பில்லியன் அமெ.டொலர் தேவை

## நிதியமைச்சின் செயலாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

ஆழிப் பேரலைகளினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை புனரமைத்து நாட்டை மீளக் கட்டியெழுப்பி புனர்வாழ்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு சுமார் 1.8 பில்லியன் அமெரிக்க டொலர்கள் தேவைப்படும் என மதிப்பிடப்பட்டுள்ளதாக நிதியமைச்சின் செயலாளர் பேராசிரியர் பி.வி. ஜெயசுந்தர தெரிவித்துள்ளார்.

இம் மீள்கட்டுமான நடவடிக்கைகளுக்கான நிதியுதவிகளை வழங்குவதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியும், உலகவங்கியும் தேவையான நிதியுதவிகளை வழங்க முன்வந்துள்ளன.

இந்நிதி நிறுவனங்களுடன் இணைந்து அமெரிக்கா, இந்தியா, ஜேர்மன் மற்றும் நோர்வே நாடுகளும் நிதி மற்றும் ஏனைய உதவிகளை வழங்கி வருகின்றன.

இந்த நிறுவனங்கள் மற்றும் நாடுகள் வழங்கும் நிதியுதவிகள் இடம்பெயர்ந்த மக்களுக்கான வீடுகளை அமைப்பதற்கும் பாடசாலைகளை மறுசீரமைப்பதற்காகவும் பயன்படுத்தப்படும்.

ஆழிப்பேரலை சேதவிரபம் தொடர்பான அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் இது விரைவில் ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் உலகவங்கிக்கும் ஏனைய நாடுகளுக்கும் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் புனரமைப்பிற்கான நிதி உதவிகள் விரைவில் கிடைக்கும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ற-8)

# தொழில் துறைகளை மீளமைப்பதற்காக ரூ.50 இலட்சம் வரை உடனடிக் கடன்

## நிதியமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம தெரிவிப்பு

(கொழும்பு)

சுனாமியால் பாதிக்கப்பட்ட வர்தகத்துறை மற்றும் சேதமடைந்த சொத்துக்களை மீளமைக்க 50 இலட்சம் ரூபா வரையிலான உடனடிக் கடன்களை வழங்குவதற்குஅரசாங்கம் தீர்மானித்துள்ளதாக நிதி அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் காலி மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் அமைச்சர் உரையாற்றுகையிலேயே இதனைக் குறிப்பிட்டார்.

இலங்கை வங்கியினாலும் மக்கள் வங்கியினாலும் வழங்கப்படவுள்ள இந்தக் கடன்களுக்கு ஒருவருட காலத்திற்கு வட்டி வீதம் கிடையாது என்றும் தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

கடற்கரையில் இருந்து 100 மீற்றர் தூரத்திற்குள் கட்டடங்களை நிர்மாணிப்பதற்கோ அல்லது வேறு எந்த வேலைகளுக்குமோ இந்தக் கடன் உதவி வழங்கப்படமாட்டாது. வர்த்தக நடவடிக்கைகளுக்கென கொள்வனவு செய்யப்படும் உபகரணங்களுக்கே வரிச்சலுகை வழங்கப்படும்.

பெரிய அளவிலான தொழில் முயற்சிகளுக்கு நிதி அமைச்சின் நிதியில் இருந்து காப்புறுதியும் வழங்கப்படும் என்றும் அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம தெரிவித்தார்.

அத்துடன், காலி மாவட்டத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சரிவர நிவாரணப் பொருட்கள் கிடைக்கப்பெறாமை குறித்து அமைச்சர் தனது கவலையை வெளியிட்டுள்ளார். (ற)

# போராலும், இயற்கையாலும் நலிவடைந்த எமது தாயகத்தை மீளக்கட்டியெழுப்புவோம்

## புங்குடுதீவு அரசியல்துறைப் பொறுப்பாளர் அழைப்பு

(புங்குடுதீவு)

**போரால் சிதைவடைந்த எமது தாயகப் பிரதேசம் மீண் டும் சுனாமி என்னும் இயற்கை அன்னையினால் சிதறடிக் கப்பட்டுள்ளது. இவ்வாறு சிதறடிக்கப்பட்ட எமது தாயகப் பிரதேசங்களை மீண்டும் கட்டியெழுப்ப வேண்டும் என சுனாமி அலையினால் உயிரிழந்தவர்களின் நினைவாக புங்குடுதீவு நசரேத் சனசமூக நிலையமும், கத்தோலிக்க விளையாட்டுக்கழகமும் இணைந்து நடாத்திய அஞ்சலி நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய புங்குடுதீவு அரசியல்துறைப் பொறுப்பாளர் வீ.இசைச் செல்வன் தெரிவித்தார்.**

அவர் மேலும் கூறுகையில்,

கடந்த இரு தசாப்தங்களாக எமது தாயகப்பிரதேசம் போரால் அழிக்கப்பட்ட இந்த வேதனைகள் வாடிக்கொண்டு இருக்கின்ற இச்சூழலில் இயற்கையாலும் எமது தாயகப் பிரதேசம் அழிக்கப்பட்டுள்ளது.

இயற்கையால் பாதிக்கப்பட்ட எமது மக்களுக்கு நிவாரண உதவிகளிலும் அரசாங்கம் வேற்றுமையினையே காட்டி வருகின்றது.

தென்னிலங்கை அரசியல் தலைவர்கள் தெற்கில் ஓர் நிர்வாகக் கட்டமைப்பு, வடக்கு-கிழக்கு இணைந்த எமது தாயகப் பிரதேசத்துக்கு ஓர் நிர்வாகக் கட்டமைப்பையும் உருவாக்கி அதில் வடக்கு-கிழக்கு இணைந்த தாயகப் பிரதேசத்தைப் புறக்கணித்து வருகிறார்கள்.

இயற்கையை அரசியல் மூலப் பொருளாகக் கெண்டு சர்வதேசத்துக்கு பொய்ப் பிரசாரங்களை அரசு செய்து வருகின்றது. அத்துடன் சர்வதேசம் வழங்குகின்ற நிதிகளினை தென்னிலங்கை அரசாங்கம் முப்படைகளுக்கான ஆயுதங்களையும் கொள்வனவு செய்து முப்படைகளையும் பலப்படுத்தி மீண்டும் ஓர் போருக்கு ஆயத்தமாகி வருகின்றது.

இந் நிலைமைகளினை பார்க்கின்ற போது எமது தமிழ் மக்களிடையே போரா? சமாதானமா? என்கின்ற இராஜதந்திரமான குழப்பநிலை தோற்றுவிக்கப்பட்டுள்ளமை வேதனைக்குரிய விடயமாகும்.

எந்த நிலை வந்தாலும் எமது மாவீரர்களுடைய கனவினை மனதில் கொண்டு போராலும், இயற்கையாலும் நலிவடைந்த எமது தாயகத்தினை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு எமது புலம்பெயர்ந்த சமூகத்தினரும் தேசியத் தலைவரும் தயாராகவே இருக்கின்றனர் என்றார்.

நசரேத் சனசமூக நிலைய மண்டபத்தில் நசரேத் சனசமூக நிலையத் தலைவர் கிறிஸ்தோப்பர் தலைமையில்முற்பகல் 11.00மணிக்கு ஆரம்பமான இந்நிகழ்வில் நினைவுச் சுடரினை அனலைதீவு அரசியல்துறைப் பொறுப்பாளர் யாழினியன் ஏற்றினார். தொடர்ந்து கருத்துரைகள் நடைபெற்றன. இதில் கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன. (ப-126)

# விலை குறையும்

(கொழும்பு)

டொலரின் பெறுமதி குறைவடைந்துள்ளதால் இறக்குமதிப் பொருட்களுக்கான வரி 10 சதவீதத்தால் குறையுமென வர்த்தக நுகர்வோர் விவகார அமைச்சர் தெரிவித்தார்.

இதற்கமைய திறந்த பொருளாதாரச் சந்தையில் சகல பொருட்களினது விலைகளும் குறையுமென எதிர்பார்க்கப் படுகிறது. (ற)

## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

**சிலர் அழுகிறார்கள். சிலர் சிரிக்கிறார்கள். சிரிப்பவர்கள் பின்பு தங்கள் முறைவரும் போது அழுவார்கள். மற்றவர்கள் சிரிப்பார்கள். நாம் என்ன செய்ய முடியும்? நம்மால் ஒன்றும் முடியாதென்பது நமக்குத் தெரியும். இவற்றையெல்லாம் ஆராய்ந்து பார்த்தால் வருவது ஒரேயொரு கருத்து மட்டுமே அதுதான் மனித நேயம்.**

சுவாமி விவேகானந்தர்



மன்னாரில் நேற்று நடைபெற்ற கண்டனப்பேரணியில் கலந்து கொண்டோரையும், பேரணியின் முடிவில் மன்னார் அரச அதிபரிடம் மகஜர் கையளிக்கப்படுவதையும் படங்களில் காணலாம்

# அ. அட்டை வழங்க நடமாடும் சேவை

(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தின் போது தேசிய அடையாள அட்டைகளை இழந்தவர்களுக்கு எதிர்வரும் பெப்பிரவரி மாதத்திற்குள் உடனடி நடமாடும் சேவைகளின் மூலம தேசிய அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளர் பி.பி சு. அபயக்கோன் தெரிவித்தார்.

இதற்கமைய பெப்பிரவரி 5,6 ஆம் திகதிகளில் காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை ஆகிய பகுதிகளிலும் 12, 13 ஆம் திகதிகளில் அம்பாறை மாவட்டத்திலும் 14,15 ஆம் திகதிகளில் திருகோணமலை மாவட்டத்திலும், 19,20 ஆம் திகதி கிளி.,யாழ். மாவட்டங்களிலும் 26,27 ஆம் திகதிகளில் மட்டக்களப்பிலும் இந் நடமாடும் சேவை நடாத்தப்படவுள்ளது. (ற)

# மனித உரிமை ஆணைக்குழுவில் முன்னாள் அதிபர் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

1998ம் ஆண்டு ஓய்வு பெற்ற தனக்கு இன்னமும் ஓய்வூதியம் வழங்கப்பட வில்லை என்று தெரிவித்து முன்னாள் பாடசாலை அதிபர் ஒருவர் யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறையிட்டுள்ளார்.

அச்சுவேலி வடக்கு வித்தியாலய வீதியைச் சேர்ந்த சின்னத்துரை என்ற ஓய்வு பெற்ற அதிபரே மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறையிட்டவராவர்.

அதிபர் தரம் 1ல் பணியாற்றி 1998ம் ஆண்டு ஓய்வுபெற்ற போதிலும் தனக்கு இன்னமும் ஓய்வூதியம் வழங்கப்படவில்லை என்று தெரிவித்து வடக்கு கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர், யாழ்.வலயக்கல்விப் பணிப்பாளர் ஆகியோருக்கு எதிராக அவர் முறைப்பாடு செய்துள்ளார்.

(ச-5)

# எஸ்.பியை விடுதலை செய்ய சாத்வீகப் போராட்டம்

## கூறுகிறார் ஜீ.எல்.பீரிஸ்

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் எஸ்.பி திஸநாயக்காவை விடுவிப்பதற்கு சாத்வீகப் போராட்டம் ஆரம்பிக்கப்படவிருப்பதாக பாராளுமன்ற உறுப்பினரும் ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகப்பேச்சாளருமான பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

நேற்றுக் கொழும்பில் இடம் பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

சுவிஸ்லாந்தில் உள்ள ஐக்கியநாடுகளுக்கான மனித உரிமைகள் அமைப்பிற்கு எஸ்.பி. திஸ்ஸநாயக்க தொடர்பான ஆவணங்கள் அனுப்பிவைக்கப்பட்டிருக்கின்றன.

முன்னாள் அமைச்சருக்கு எதிராக வழங்கப்பட்ட உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு சட்டவிரோதமானது.

இது இலங்கையின் சட்டத்திற்கு முற்றிலும் முரனாணது. அதனால் உச்சநீதி மன்றத்தின் தீர்ப்பு மறுபரிசீலனை செய்யப்படவேண்டும். அதனை உடனடியாக மேற்கொண்டு அவரை விடுவிக்கவேண்டும் என்று பீரிஸ் தெரிவித்தார்.

(இ-4)

# திருடன் பிடிபட்டான்

(நீராவியடி)

யாழ்ப்பாணம் நீராவியடியில் சைக்கிள் திருடிய ஒருவர் அப் பகுதியில் நின்ற இளைஞர்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டு, நயப்புடைக்கப்பட்டுபொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

நீராவியடிப் பிள்ளையார் கோவிலில் வழிபடச்சென்ற பக்தர் ஒருவரின் சைக்கிள் பூட்டை உடைத்து திருடமுற்பட்ட போது அவர் கையும் மெய்யுமாகப் பிடிக்கப்பட்டார்.இதேவேளை கடந்த வாரம் இவ்வாறான திருட்டுச்சமபவங்கள் அப்பகுதியில் இடம் பெற்றுள்ளதாக மக்கள் தெரிவித்தனர். (ச-92)

## புலிகளின்...

உலங்கு வானூர்தி மூலம் கிளிநொச்சியை வந்தடைந்த அவர்களை விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன், தளபதி கேணல் தீபன், தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் க.வே. பாலகுமாரன் ஆகியோர் வரவேற்றனர். அவர்கள் விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடத்துடன் நேற்று முக்கிய கலந்துரையாடலில் ஈடுபட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. (ச)

# விரிவுரை மண்டபம் அமைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். உயர் தொழிநுட்ப நிறுவனத்திற்கு சர்வதேச மாணவர் பேரவையினால் 3 லட்சம் ரூபா செலவில் விரிவுரை மண்டபம் ஒன்று அமைத்து கொடுக்கப்படவுள்ளது.இதற்கான வேலைகள் ஆரம் பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன.

கல்விகற்பதற்கான இடவசதி இன்மையால் இவ்வாண்டிற்கான மாணவர் தெரிவில் 200ற்கும் மேற்பட்டமாணவர்களின் கல்வி பாதிக்கும்நிலை ஏற்பட்டுள்ளது.

உயர் கல்விகற்பதற்கான தன்மை இருந்தும் அம்மாணவர்களின் கல்வி இடவசதி இன்மையால் பாதிக்கப்படும் நிலையை தடுக்கும் மூலமாகவே தாம் விரிவுரை மண்டபம் அமைத்துக் கொடுப்பதாக மாணவர்பேரவையினர் தெரிவித்தனர். (ச)

# றஸ்ஸம் கொழும்பு வந்தார்

(கொழும்பு)

இடம் பெயர்ந்தோர் தொடர்பான சர்வதேச அமைப்பின் பணிப்பாளர் நாயகம் றஸ்சம் மொக்குன்னிலி நேற்றிரவு கொழும்பை வந்தடைந்தார்.

தொழில் அமைச்சர் அதாவுட செனவிரத்தன விடுத்த அழைப்பின் பேரிலேயே அவர் இலங்கைக்கு வருகை தந்துள்ளார். சுனாமியினால் பாதிக்கப்பட்ட காலி, அம்பாந்தோட்டை, அம்பாறை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களை அவர் தொழில் அமைச்சருடன் சென்று பார்வையிடவுள்ளார். (இ-8)

# கரவெட்டிவாசி மாத்தறையில் மரணம்

(துன்னாலை)

சுற்றுலாவுக்குச் சென்ற கரவெட்டிவாசியொருவர் மாத்தறையில் கடுங்குளிரினால் மரணமானார்.

கரவெட்டியிலிருந்து குடுமபத்துடன் சுற்றுலாவுக்குச் சென்ற கி.மரியாம்பிள்ளை (வயது 62) என்பவரே மரணமானவராவர்.

ஓய்வு பெற்ற சிற்றூழியரான இவர், தான் 20 வருடங்களுக்கு முன்னர் வசித்த மாத்தறைப் பிரதேசத்தை தனது பிள்ளைகளுக்குக் காட்டுவதற்காகச் சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(ச-101)

# கொரிய கூட்டுறவுத்தலைவர் இலங்கைக்கு நேற்று விஜயம்

(கொழும்பு)

கொரிய சர்வதேச கூட்டுறவு நிறுவனத்தின் தலைவர் கின்ஸ் சுக்கியூன் மூன்று நாள் விஜயத்தைமேற்கொண்டு இலங்கை வந்தடைந்தார்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட இடங்களில் கொரிய நாட்டு நிவாரணப் பணியாளர் மேற்கொள்ளும் நிவாரணபணிகளை அவர் பார்வையிடவுள்ளார்.

இவர் யாழ்ப்பாணத்திற்கும் விஜயம் செய்வார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

(க-60)



கலாநிதி அன்ரன் பாலசிங்கம் முல்லைத்தீவு விஜயத்தின்போது...

## வடக்கு - கிழக்கு...

கள் மற்றும் தளபாடங்கள் என்பன கொள்வனவு செய்யப்பட்டு பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கென அரசி, பால்மா, சீனி உட்பட பல அத்தியாவசிய நிவாரணப் பொருட்களை தாம் அனுப்பி வைத்துள்ளதாகவும் அனர்த்த முகாமைத்துவ பணிப்பாளர் டாக்டர் தாராடிமெல் தெரிவித்துள்ளார்.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள கூட்டுறவுச் சங்களின் மூலம் 30 நாட்கள் கடனடிப்படையில் அரிசி வழங்குவதற்கும் கூட்டுறவு விற்பனை நிலையம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இவ்வாறு பகிர்ந்தளிப்பதற்காக 15 ஆயிரம் மெற்றிக்தொன் அரிசி கையிருப்பில் உள்ளதாக சந்தைப்படுத்தல் முகாமையாளர் அனுரா பிரியந்த தெரிவித்துள்ளார்.

(இ-08)

## வடமராட்சியில் சுனாமி...

அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டவர்கள் மீண்டும் அனர்த்தம் என்ற செய்தியை அறிந்ததால் பெரும் மனக்கிலேசத்துடன் உயிரைப் பாதுகாக்க ஓட்டம் எடுத்தனர்.

இதனால் வடமராட்சியில் நகரப்பகுதி எங்கும் பெரும் நெருக்கடியும் பரபரப்பும் ஏற்பட்டது.

மக்கள் வெள்ளம் போல் இடம் பெயர்ந்து ஓடிவந்ததை அவதானித்த பருத்தித்துறை நகரப்பகுதி மக்களும் அச்சம் காரணமாக ஓட்டம் எடுத்தனர்.

குழந்தைகள், முதியவர்கள், இளைஞர்கள், யுவதிகள் என ஆயிரக்கணக்கானோர் இடம் பெயர்ந்து வீதிக்கு வந்ததால் பெரும் பரபரப்பும் நெருக்கடியும் ஏற்பட்டது.

கரையோரப்பகுதி, வர்த்தக நிலையங்கள், அரச அலுவலகங்கள், பாடசாலைகள் அனைத்தும் அச்சம் காரணமாக உடனடியாக மூடப்பட்டன.

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மெதடிஸ்தமிஷன் பெண்கள பாடசாலைக்கு முன்பாக பெரும் திரளாகக்கூடிய பெற்றோர் தமது பிள்ளைகளை உடனடியாக அங்கிருந்து அழைத்துச்சென்றனர்.

இதேவேளை மக்களை அமைதிப்படுத்தும் வகையில் சுனாமி அலைகள் எதுவும் எங்கும் தாக்கவில்லை என்றும் விசமிகளின் வதந்தியே அது என்றும் உடனடியாக ஒலிபெருக்கிகள் மூலம் மக்களுக்கு அறிவிக்கப்பட்டது.

இதனையடுத்து மக்கள் அமைதியடைந்து நிம்மதி பெருமூச்சுடன் தமது இடங்களுக்கு மீண்டும் திரும்பிச் சென்றனர். எனினும் ஒருவித அச்சநிலை அங்கு நேற்று மாலைவரை காணப்பட்டது.

இது இவ்வாறு இருக்க சுனாமி அனர்த்தம் மீண்டும் ஏற்பட்டு விட்டதாக அறிந்த குடாநாட்டு ஏனைய பகுதிகளை சேர்ந்த இளைஞர் யுவதிகள் வடமராட்சிக்கு நேற்று படையெடுத்துச் சென்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இதேவேளை சுனாமி ஆழிப் பேரலை வருகிறது என்ற வதந்தி மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை, காலி, அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களிலும் பரவியதால் அங்கும் கரையோரப்பகுதி எங்கும் பெரும்பரபரப்பும் அச்சமும் ஏற்பட்டது.

இதனால் அங்கும் இடம்பெயர்வுகள் ஏற்பட்டதாக எமது கிழக்கு தென்பகுதிச் செய்தியாளர்கள் அறிவித்துள்ளனர்.

இலங்கையின சகல கரையோரப் பகுதிகளிலும் மேற்படி சுனாமி வதந்தி ஒரேநேரத்தில் பரவியமையானது இலத்திரனியல் ஊடகம் ஒன்றின் ஊடாகவே பரவிஇருக்கலாம் என்று நம்பப்படுகின்றது.

(இ-19,101,113,)

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல. 15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.01.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.